
# சகலருக்கும் வெற்றி



සමගි ජන සන්ධානය
ஐக்கிய மக்கள் கூட்டணி
SAMAGI JANA SANDHANAYA

# சகலருக்கும் வெற்றி



”தாய்நாட்டை செழிப்பான தேசமாக வழிநடத்தி அனைத்து பிரஜைகளின் வாழ்க்கையையும் பாதுகாப்பாக்குவதே எனது ஒரே நோக்கமாகும்.”
ஒன்றிணைவோம், அர்ப்பணிப்போம், வெற்றி பெறுவோம்...
சஜித் பிரேமதாச.
සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa
X

**சங்கைக்குரிய தேரர்களே, மதிப்புக்குரிய மதத் தலைவர்களே,**
**அன்புள்ள இலங்கை பிரஜைகளே,**

நமது நாட்டின் அரசியல் பயணத்தில் ஒரு முக்கியமான தருணத்தை நெருங்கும் இந்த வேளையில், முகங்கொடுத்துள்ள மோசமான நிலையிலிருந்து நமது நாட்டை மீட்டெடுத்து சிறந்த மாற்றத்தை நோக்கிப் பயணிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின், ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆகிய நான், எங்களது கொள்கைப் பிரகடனத்தை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஒரு புதிய அரசியல் சக்தியாகும். சமூக நீதியை மையமாகக் கொண்ட சமூக சந்தைப் பொருளாதாரத்தின் மூலம் புதிய இலங்கையை உருவாக்குவதே எங்களது நோக்கமாகும். ஒவ்வொரு பிரஜையின் குரலும் முறையாகக் கேட்கின்ற, நீதி நிலைநாட்டப்படுகின்ற முறையே, உண்மையான ஜனநாயகம் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, எங்களது பொருளாதாரத் திட்டம் வெறும் புள்ளிவிவர வளர்ச்சிக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல, சமூகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் உறுதியான செழிப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சுதந்திர சந்தைகளின் பொருளாதார வலிமையை சமத்துவத்திற்கான ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இணைத்து, எந்தவொரு இலங்கையரும் பின்தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்ய, நாங்கள் ஒரு நெகிழ்வான மற்றும் அனைத்தும் உள்ளடக்கியதான பலம் வாய்ந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்.

எங்கள் தூர நோக்கின் மற்றொரு முக்கிய அம்சம் ஊழலுக்கு எதிரான போராட்டமாகும். ஊழல் நீண்ட காலமாக இலங்கையின் மீது ஒரு களங்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. இது இறுதியில் நம்மை வங்குரோத்தாக்கி, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை சீர்குலைத்து, தாய்நாட்டையே கொள்ளையடித்துள்ளது. எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் தேவையான சீர்திருத்தங்களுடன் அதன் ஆட்சியின் ஒவ்வொரு அம்சத்திலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உள்ளடக்குவதன் மூலம் ஊழலை முற்றாக ஒழிக்கும்.

சுபீட்சத்தை நோக்கிய எங்கள் பயணத்தில், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய முக்கியமான துறைகளில் விசேட கவனம் செலுத்தப்படும். பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள சுகாதாரத் துறையை மீட்டெடுத்து ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப வளங்களால் வலுப்படுத்தப்படும். கல்வித் துறை வேகமாக மாறி வரும் உலகிற்கு ஏற்றவாறு மேம்படுத்தப்படும் அதே நேரத்தில் இலங்கையின் வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய சர்வதேச அளவில் போட்டியிடக்கூடிய மனித மூலதனத்தை உருவாக்குவதற்கான பாரிய மறுசீரமைப்புகளும் மேற்கொள்ளப்படும்.

வரலாற்றை நோக்கும் போது, தனி நபரால் அல்ல, கூட்டு முயற்சிகளாலேயே நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. இதனால்தான் அனைத்து துறைகளிலும் தலைமைத்துவத்தை வகிக்கக்கூடிய மிகவும் தகுதிவாய்ந்த, நடைமுறைக்கேற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த அரசியல் தலைவர்கள் குழுவை ஒன்றிணைத்துள்ளோம். ஒவ்வொரு துறையின் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து இவர்களிடம் காணப்படுகின்ற ஆழ்ந்த புரிதல், இந்தக் கொள்கைப் பிரகடனத்தில் உள்ள மிக உயர்ந்த இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்யும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது இன்னுமொரு புதிய கட்சி மட்டுமல்ல இது இலங்கையின் உண்மையான பலத்தை அடையாளம் கண்டு தேவையான மாற்றத்திற்காக நாட்டை சிறப்பாக வழிநடத்தக்கூடிய மக்கள் சக்தியாகும். இந்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக உங்கள் ஆதரவை நான் கோருவது எனக்காக அல்ல, வலிமையான, நியாயமான, மகிழ்ச்சிகரமான, செழிப்பான நாட்டை உருவாக்குவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் தாய் நாடு தனது உண்மையான திறனை உணர முடியும் என்பதற்காகவேயாகும். இலங்கையை சுபீட்சமான நாடாக முன்னோக்கிக் கொண்டு செல்லுவதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

நன்றி

இவ்வண்ணம், உண்மையுள்ள

சஜித் பிரேமதாச.
தலைவர்- ஐக்கிய மக்கள் கூட்டணி

29 ஆகஸ்ட் 2024

**சகலருக்கும்**
**வெற்றி**

தொடர்புகளுக்கு : ஸ்ரீ
ஐக்கிய மக்கள் சக்தி
இல: 592, கோட்டே வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே 10100
Phone: 011 287 0112
e-mail : info@sajith.lk
Web : www.sajith.lk

## உள்ளடக்கம்

**வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்.**

- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்
- கடன் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நாணய நிதியம்
- நிதி மற்றும் பரிமாற்ற விகித கொள்கை
- வருமான வளர்ச்சியை அடைதல்
- செலவுக் கட்டுப்பாடு
- பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்
- அரசுத்துறை முகாமைத்துவ மற்றும் டிஜிட்டல்மயமாக்கல்
- வலுசக்தி மற்றும் பயன்பாட்டு சீர்திருத்தங்கள்
- உற்பத்தி காரணி சந்தை சீர்திருத்தம்
- கமத்தொழில், மற்றும் கால்நடை அபிவிருத்தி
- காணி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்
- போக்குவரத்து - நெடுஞ்சாலை, கடல் மற்றும் ஆகாயம்
- மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள்
- சுற்றுலாத் துறை
- விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி
- கைத்தொழில் துறை
- சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் (MSME) துறை
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறை
- நிர்மாணத்துறை
- மின்சக்தி மற்றும் வலுசக்தி

**அனைத்துப் பிரஜைகளையும் வலுப்படுத்தல்.**

- கல்வி, தொழில்முறை பயிற்சி மற்றும் இளைஞர்கள்
- மகளிர் மற்றும் சிறுவர் வலுப்படுத்தல்
- சுகாதாரம், போசாக்கு, சுதேச மருத்துவம் மற்றும் சமூக நலன்
- வலுப்படுத்தல் மற்றும் சுபீட்சத்தைக் கட்டியெழுப்புதல்
- மாற்றுத்திறனாளிகள்
- ஆதிவாசிகள் சமூகம்
- விளையாட்டுத்துறை

**அரச துறையை மேம்படுத்தல்**

- இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு ஏற்ற டிஜிட்டல் இலங்கை
- திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கம்
- அரசாங்க சேவை
- கடவுச்சீட்டு வரிசை முடிவுக்கு கொண்டு வருதல்

**வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்தல்.**

- மத மற்றும் கலாச்சார விவகாரங்கள்
- ஊடகம்
- வீட்டமைப்பு மற்றும் பொது வசதிகள்
- புலம்பெயர்ந்த ஊழியர்கள் மற்றும் வேலை வாய்ப்பு
- மலையக மக்கள்
- ஓய்வூதிய நன்மைகளைப் பாதுகாத்தல்
- ரணவிரு (போர் வீரர்) நலன்
- வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல்

**தேசியப் பாதுகாப்பு**

- ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல்
- வெளிநாட்டு உறவுகள் மற்றும் வர்த்தகக் கூட்டணிகள்
- தேசிய பாதுகாப்பு
- சட்டம் மற்றும் ஒழுங்கு
- ஊழல் எதிர்ப்புச் சட்டம்
- போதைப்பொருட்கள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தல்.
- நிலைபெறுதகு சுற்றாடல்

## வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்.

இலங்கை அதிக கடன், கொள்கை முடிவுகள், நிர்வாகம் காரணமாக மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. சமீபத்திய நடவடிக்கைகள் பணவீக்கத்தைக் குறைக்கவும் வெளிநாட்டு இருப்புக்களை அதிகரிக்கவும் உதவியுள்ளன, ஆனால் முழுமையான மீட்சி மற்றும் முன்னேற்றமடைந்த பொருளாதாரமாக மாறுவதற்கான பாதை மிகவும் சவாலானது. சராசரி இலங்கையர் உயர் விலைகள், உயர் வரிகள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைவேறாததால் நெருக்கடியின் சுமையைத் தாங்க வேண்டியுள்ளது.

நாங்கள் சமூக ஜனநாயக அரசியல் கோட்பாடு மூலம் நெறிப்படுத்தப்படுகின்ற சமூக சந்தைப் பொருளாதார மாதிரியைப் பின்பற்றுகின்றோம். இதன் மூலம் நியாயமான மற்றும் அனைத்தும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, சந்தையின் பலத்தைப் பயன்படுத்தி அனைவருக்கும் சமூக நீதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிறோம். எங்கள் திட்டமிடல் குறிப்பு 3.0 (Blueprint 3.0) மூலம் இந்த சவால்களை எதிர்கொள்வதற்கும், வலுவான வளர்ச்சி மூலம் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், அனைவருக்கும் சுபீட்சமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் மூலோபாய திட்டத்தை வழங்குகிறது. ஊழலை ஒழிப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சமாக இருந்தாலும் அது மாத்திரம் தீர்வு அல்ல என்பதையும் நாங்கள் காண்கின்றோம். பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக பசுமை பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மையை மேம்படுத்துவது எங்களது அடிப்படை எண்ணக்கருவின் முக்கியமான அம்சங்களாகும்.

நிலையான வளர்ச்சியை அடைய நமக்கு இரண்டு வகையான அணுகுமுறைகள் தேவை: முதலாவதாக, நாம் பொருளாதாரத்தை சீர்திருத்தி, அதை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் உலகளாவிய ரீதியில் இணைக்கப்பட்டதாகவும் மாற்ற வேண்டும். இது மக்களிடையே செல்வத்தை உருவாக்கும். இரண்டாவதாக, பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பாதுகாப்பதற்காக இலக்கு வைக்கப்பட்ட மானியங்களுடன் கூடிய வலுவான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு மூலம் பொருளாதார நீதி மற்றும் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும். மேலும், பொருளாதார முன்னேற்றம் நமது குடிமக்களின் நல்வாழ்வு மற்றும் ஒட்டுமொத்த மகிழ்ச்சியுடன் கைகோர்த்துச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதன் மூலம் மொத்த தேசிய மகிழ்ச்சியை

(Gross National Happiness) உயர்த்த நாம் எதிர்பார்க்கிறோம்.

- **வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்**

வலுவான ஊழல் எதிர்ப்பு சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், தற்போதைய சட்டக் கட்டமைப்பின் அமுலாக்கத்தை வலுப்படுத்துவதன் மூலமும் நீதி வழங்கல் துரிதப்படுத்தப்படும். திருடப்பட்ட சொத்துக்களை மீட்டெடுப்பதற்கும், நாட்டின் நிர்வாக அமைப்பில் ஊடுருவியுள்ள ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும் ஒரு வலுவான திட்டம் முக்கிய அம்சமாக இருக்கும். ஊழல்வாதிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்காக அரசியல் தலையீடுகள் இல்லாத சுயாதீன பொது வழக்குத் தொடுநர் அலுவலகத்தை அமைப்பது சட்டத்தின் இலகு திருத்தத்தின் மூலம் அவசர அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அரச கொள்வனவு வெளிப்படையாகவும், ஊழலற்றதாகவும், திறமையாகவும் இருப்பதை உறுதி செய்ய பொதுக் கொள்வனவு சட்டத்தை நிறைவேற்றுவோம். அனைத்து அரசாங்கக் கொள்வனவுகளும் டிஜிட்டல் தளத்திற்கு மாற்றப்படும்.

நுகர்வோருக்கு சிறந்த தரமான மற்றும் விலையை வழங்க, ஒரு போட்டி சட்டத்தை உடனடியாக அறிமுகப்படுத்துவதன் மூலம் ஏகபோக மற்றும் சிலரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நடத்தைகளில் மாற்றங்கள் செய்யப்படும்.

அரச நிதி முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவோம். அரச செலவுத் திட்டங்கள் மற்றும் கடன் முகாமைத்துவ உத்திகள் அத்துடன் வரி நிர்வாகம் குறித்த முழுமையான வெளிப்பாடு இருக்கும். பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை அமைப்பதன் மூலம், அரசாங்கத்தின் அனைத்து வரி மற்றும் செலவு முன்மொழிவுகளின் விரிவான விளக்கம் வழங்கப்படும்

- **கடன் நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் சர்வதேச நாணய நிதியம்**

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பொது நிதி ஒழுக்கத்தை வலுப்படுத்தி, வருமானம், ஆரம்பக் கணக்கு மீதி மற்றும் கடன் தொடர்பான இலக்குகளை அடையது கடினமாகும். ஆனால் அவசியமான சீர்திருத்தங்களை தொடர்ந்தும் செய்வோம். எவ்வாறாயினும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதை உறுதிப்படுத்தும் தற்போதைய திட்டத்திற்கு திருத்தங்களை முன்வைத்து இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்.

எதிர்பார்க்கப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை விட அதிக பலனைப் பெற வெளிநாட்டு கடன் வழங்குநர்களுக்கு மீண்டும் தங்கள் பக்கம் சாதகமான திருப்பங்களை செய்யும் உட்பிரிவுகளுக்கு இடமளிக்கும் தீர்வுக்கு ஒப்புக்கொள்ளும்போது, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் சுமையை தாங்கிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு "சம வாய்ப்பு" வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

- **நிதி மற்றும் பரிமாற்ற விகித கொள்கை**

புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியின் (CBSL) சுயாட்சியை மதிக்கும் அதே வேளையில், அதன் பணவீக்க இலக்கை அடைவதற்கான பொறுப்புக்கூறலுக்கு வங்கியைக் கட்டுப்படுத்துவோம். மேலும், சர்வதேச அளவில் போட்டித்தன்மை வாய்ந்த அந்நியச் செலாவணி விகிதம் மற்றும் குறைந்த, நிலையான வட்டி விகிதங்களை உறுதி செய்ய ஆதரவளிப்போம்.

- **வருமான வளர்ச்சியை அடைதல்**

அரசாங்க வருவாயை உயர்த்துவதற்கான ஒரே தீர்வு வரிகளை உயர்த்துவது மட்டுமல்ல. வருவாயை அதிகரிப்பதற்கும், செலவுகளையும் ஊழலையும் குறைப்பதற்கும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது எங்களின் பிரதான நோக்கமாகும். அவ்வாறே தொழில் வல்லுநர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பும் நியாயமற்ற வரிக்கட்டமைப்பை மாற்றியமைப்போம்.

ஒட்டுமொத்த வருவாய் இலக்குகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் நடுத்தர வர்க்கத்தினரின் அதிகப்படியான சுமையை குறைக்கும் எங்களது திருத்தப்பட்ட கட்டமைப்பின் சில குறிப்பிட்ட அம்சங்கள் பின்வருமாறு:

- ○ தனிநபர் வருமான வரி: மாதாந்தம் ரூ. 100,000 வரி விலக்கு வகுதியின் பின்னர், தனிநபர் வருமான வரி 1% இல் தொடங்கி, மாதாந்தம் சுமார் அரை மில்லியன் வருமானம் வரை 24% க்கு மட்டுப்படுத்தப்படும். அதற்கு மேல், அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு தற்போதைய விகிதங்கள் பொருத்தமாக இருக்கும்.
- ○ நிறுவன வருமான வரி: ஏற்றுமதி இலாபங்களுக்கான தற்போதைய 30% விகிதத்தை 6% ஆகக் குறைக்கவும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு 15% அடிப்படை அரிப்பு மற்றும் இலாப மாற்றல் (Base Erosion and Profit Shifting) குறைந்தபட்ச மாற்று வரியை

அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

- பெறுமதி சேர் வரி (VAT): வரி வலையமைப்பை விரிவுபடுத்தும் பொருட்டு பொதுவான டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் வரி இணக்கப்பாடு மேம்பட்ட பிறகு, பெறுமதி சேர் வரியை 15% ஆகக் குறைக்க உத்தேசித்துள்ளோம். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக நுகர்வுப் பொருட்களாக அடையாளம் காணப்பட்ட சில பொருட்கள் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- சிகரெட் மற்றும் மதுபானங்களுக்கான உற்பத்தி வரி மற்றும் கெசினோக்களுக்கான வரி ஆகியவை வரி குறைப்புகளின் நிதியளிப்புக்காக பயன்படுத்தப்படும்.
- சிரேஸ்ட பிரஜைகள் சேமிப்புக்கு 15% உத்தரவாத வட்டி விகிதம் வழங்கப்படும்.

- **செலவுக் கட்டுப்பாடு**

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் வருவாய் அதிகரிப்பில் கவனம் செலுத்தினாலும், அது அரசாங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் போதுமான கவனம் செலுத்தவில்லை. எனவே, வீணான அரச செலவுகளையும் ஊழலையும் கட்டுப்படுத்துவதே எங்கள் பொருளாதார பார்வையின் நோக்கமாகும். அரச நிறுவனங்களை சீர்திருத்துவதும் இதில் அடங்கும். இவ்வாறு சேமிக்கப்படும் நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமூக பாதுகாப்பு வலையமைப்பை செயல்படுத்துவதற்கும், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை வலுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும், அரசாங்க செலவினங்களை நிர்வகித்து, அரசாங்கச் செலவுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்த தரவு அடிப்படையிலான திட்டமிடலைப் பயன்படுத்துவோம்.

- **பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்**

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இயக்கியாக பெரிய மற்றும் சிறிய தனியார் தொழில்முனைவர்களுடன் இணைந்து உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைந்த சமூக சந்தைப் பொருளாதாரமாக இலங்கையை மாற்றுவதற்கு எங்கள் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும். இந்த மாற்றத்திற்கு இரண்டு முக்கிய நடவடிக்கைகள் தேவை: வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மூலம் உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி மற்றும் தொழிலாளர்

சந்தைகள் உள்ளிட்ட உள்நாட்டு சந்தைகளை விடுவித்தல். பயனுள்ள சந்தை சமிக்ஞைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் இது தேசிய வளர்ச்சிக்கான தனியார் துறையின் முழு பங்களிப்பை வலுப்படுத்தும்.

○ **கமத்தொழில் சீர்திருத்தங்கள்**

விவசாயத் துறையின் பல்வேறு துறைகளில் எழுந்துள்ள சவால்களுக்கு தீர்வு காண அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். பழைய சட்டங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டியுள்ளன. கமத்தொழில் சந்தையை இலகுபடுத்துவதற்கு நீர்ப்பாசனம் மற்றும் குளங்களை புனரமைப்பதற்கும் நிதி மற்றும் காப்புறுதி வசதிகளையும் வழங்க வேண்டியுள்ளது.

தனிப்பட்டவாறு ஒவ்வொரு விவசாயிகளையும் பொறுத்தவரையில், எது உற்பத்தி செய்யப்படுகிறது, எவ்வளவு மற்றும் எப்போது என்பது பற்றிய தகவல்களைப் பெறுவது முதல் நிதி உள்ளீடுகள் மற்றும் பயிர் சுழற்சி முகாமைத்துவம் வரையிலான முழு மதிப்புச் சங்கிலியும் மேம்படுத்தப்பட வேண்டும். பின்னர் சேமிப்பு, விநியோக சேவை தொடக்கம் விற்பனை வரை மேற்கொள்ளப்படுகின்ற அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவத்துக்குரிய பிரச்சினைகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

கிராமப்புற வறுமையைக் குறைத்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் கிராமியத்துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக விரைவான, ஸ்மார்ட் தொழில்நுட்பம் சார்ந்த விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம். இதில் - நெல், காய்கறிகள் மற்றும் தோட்டப் பயிர்கள் - பயிரிடுவது முதல் விற்பனை செய்வது வரை, பாதுகாப்பான விவசாயம், நீர் உயர்த்தி நீர்ப்பாசனப் பணிகள் (lift irrigation) சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சில நேரங்களில் செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கூடிய ஹைட்ரோபோனிக் விவசாயம் போன்ற தலையீடுகள் அடங்கும். டிஜிட்டல் பொதுக் உட்கட்டமைப்பை (DPI) அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த முயற்சியை செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வர முடியும்

அரிசி விலையைக் குறைத்து குறைந்த விலையிலேயே வைத்திருக்க "சக்தி" அரிசி ஆலை உரிமையாளர்களின் தேசிய கூட்டுறவு திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவோம். 40% அறுவடைக்குப் பின் இழப்பைக் குறைக்க காலநிலை கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் விவசாய உற்பத்தி களஞ்சிய வலையமைப்பான "பிரபாஸ்வர" நிகழ்ச்சித்திட்டம் உடனடியாக நாடு முழுவதும் நிறுவப்படும். இதுவும் உணவு விலையைக் குறைக்க உதவும்.

- **கைத்தொழில் அபிவிருத்தி : உலகளாவிய மதிப்புச் சங்கிலியுடன் இணைதல்**

இதுவரை பயன்படுத்தப்படாத பயிற்சிகளை வழங்கக்கூடிய பணியாளர்கள் மற்றும் எமது மூலோபாய அமைவிடத்தைப் பயன்படுத்தி, பகுதி உற்பத்தியில் தொடங்கி உலகளாவிய உற்பத்தி மதிப்புச் சங்கிலியுடன் (Global Manufacturing Value Chains) இலங்கை இணைக்கப்படும். இதில், கிராபைட் (Graphite) உள்ளிட்ட முக்கியமான பொருட்களின் மாற்றங்களைப் பயன்படுத்தி உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்சாதன உற்பத்தி மற்றும் மின் வாகன பாகங்களுடன் ஒருங்கிணைக்க திட்டமிடுகிறோம். கைத்தொழில் துறையின் வெற்றியை மேலும் முன்னெடுக்கவும் எமது அரசாங்கம் உறுதிபூணும்.

- **பெறுமதி உருவாக்கத்தின் பிரதான காரணியான சேவைகள்**

சேவைத் துறை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறாகும். இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் இலங்கையை வழங்கல் சேவை மையமாக மாற்றுவதில் எமது கவனம் இருக்கும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் (MSMEs) மற்றும் புதிய வணிகச் சுற்றாடல் முறைமை.

நுண், சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஆரம்ப வணிக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் பெரிய நிறுவனங்களைப் போலவே மொத்த மதிப்பு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டுள்ளன, குறிப்பாக தொற்றுநோய், அதைத் தொடர்ந்த பொருளாதார வீழ்ச்சி காரணமாக தற்போது நெருக்கடியில் உள்ளன. இலங்கையின் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சிப் பாதைக்கு முக்கிய பங்களிப்பாளராக மாற்றுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரை மீட்டெடுத்தல் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல் அத்துடன் மூலதன அனுகல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் வழங்கப்படும்.

- **துறைமுக நகரம்**

நிதித் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் நெனோ தொழில்நுட்பம் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளுக்கான ஆசியாவின் பிராந்திய மையமாக துறைமுக நகரத்தை மாற்றுவதற்கான சட்டத் திருத்தங்களை கொண்டு வருவோம்.

- **அரசுத்துறை முகாமைத்துவ மற்றும் டிஜிட்டல்மயமாக்கல்**

சுகாதாரம், கல்வி மற்றும் சமூக சேவைகளை திறமையாகவும், நியாயமாகவும் பொதுவாக வகுக்கப்படுதல் பொருளாதார வளர்ச்சி

மற்றும் சிவில் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமானதாகும். இந்த சேவைகளை வழங்கும் பொறுப்பு அரச துறையிடம் உள்ளது. ஆனால் அது பல்வேறு சமாந்தர சேவைகளுக்கிடையே காணப்படுகின்ற பிரச்சினைகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படாத மனித வளங்கள் மற்றும் குறைந்த ஊதியம் காரணமாக அழுத்தத்தில் இத்துறை காணப்படுகின்றது. அரச கொள்வனவு முதல் சேவை வழங்கல் வரை அனைத்து துறைகளிலும் செயல்பாட்டு ஊழல் மற்றும் பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை தீர்க்க பல தசாப்தங்களாக சீர்திருத்தங்கள் தோல்வியடைந்துள்ளன.
உற்பத்தித்திறனை மேம்படுத்த முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் டிஜிட்டல்மயமாக்கலின் மூலமும் அரச சேவையை சீர்திருத்த திட்டமிடுகிறோம். இது ஊழலைக் குறைக்கும் அதே வேளையில் முகாமைத்துவ, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தும்.

அரச தொழில்முயற்சிகளுக்கான பிரதான கம்பனியை நிறுவுவது அரச தொழில்முயற்சிகளில் சீர்திருத்தத்தின் முக்கிய பகுதியாகும். இந்த அரச நிறுவனங்களுக்கான பிரதான நிறுவனம் சிங்கப்பூரின் “தமசெக் மாதிரி“க்கு ஒத்த கட்டமைப்பின் கீழ் அரச நிறுவனங்களின் உரிமையாளர்களை நிர்வகிப்பதற்கான மையப்படுத்தப்பட்ட மற்றும் மூலோபாய கட்டமைப்பை வழங்கும். தேசிய பாதுகாப்பு நோக்கங்கள், சர்வதேச போட்டித்தன்மை மற்றும் செயல்திறனுடன் சமநிலைப்படுத்தப்பட்டு, பல்வேறு தரப்பினரின் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் அரசாங்கம் வைத்திருக்கும் பங்குரிமை சதவீதமானது தீர்மானிக்கப்படும்

- **அரச துறையின் வினைத்திறனை மேம்படுத்த டிஜிட்டல் சுகாதார பொது உட்கட்டமைப்பை உருவாக்குதல்**

மருந்து கொள்வனவு முதல் அனைத்து சுகாதார சேவைகள் வரை உயர் தொழில்நுட்ப தீர்வுகளுடன் சுகாதாரத் துறை மாற்றமடையும். தரம் மற்றும் திறனை மேலும் மேம்படுத்த உலகின் மிகவும் அபிவிருத்தியடைந்த மற்றும் வேகமான ஆம்புலன்ஸ் சேவையாக வகைப்படுத்தப்பட்ட “1990 சுவ சரிய“ ஆம்புலன்ஸ் சேவைக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் கற்றுக்கொண்ட பாடங்கள் சேர்க்கப்படும்.

- **வலுசக்தி மற்றும் பயன்பாட்டு சீர்திருத்தங்கள்**

மின்சாரம் மற்றும் வலுசக்தித் துறைகளில் எமது அணுகுமுறையானது

தனிப்பட்ட விருப்பத்தை குறைக்கும் வெளிப்படையான, தானியங்கி அமைப்புகளை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும், மேலும் தனிப்பட்ட விருப்பத்திற்கேற்ப கையாளுவதற்கான இடைவெளிகளை மூடி, கோரப்படாத முன்மொழிவுகளை (Unsolicited proposal) நோக்கி செல்வதற்கான "மறைமுக கொடுக்கல் வாங்கல்காரர்கள்" தொடர்பான ஊக்குவிப்புகள் அகற்றப்படும்.

உற்பத்தி மற்றும் விநியோகத்தில் போட்டியை உருவாக்க வேண்டியது அவசியம், ஏகபோக அதிகாரம் மற்றும் திறமையின்மை காரணமாக ஏற்படும் அதிக வலுசக்தி செலவின் சுமையை நுகர்வோர் மற்றும் தொழில்துறை ஏற்கக் கூடாது. செலவை பிரதிபலிக்கும் மின்கட்டண முறைக்கு ஆதரவளிக்கிறோம், ஆனால் இந்த செலவில் மின்சார கொள்வனவு ஒப்பந்தங்களில் ஊழல் மற்றும் திறமையின்மையின் சுமை நீக்கப்பட வேண்டும்.

புதிய மின்சார சட்டத்தால் முன்மொழியப்பட்ட கட்டமைப்பை மறு மதிப்பீடு செய்து, சீர்திருத்த செயல்முறையின் திறன் மற்றும் செலவு பயனுள்ளதாக இருப்பதை உறுதிசெய்ய திருத்தங்களை பரிந்துரைக்கிறோம். எமது முன்னுரிமைகளில் நியாயமான மின்சார சந்தையை நிறுவுதல், நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல், பொறுப்புக்கூறலை அதிகரித்தல் மற்றும் தொழில்துறையை அரசியல் மயமாக்காமல் இருப்பது ஆகியவை அடங்கும்.

இலங்கையை பிராந்திய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு, 2030க்குள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியில் 70% இலக்கை அடைவது மட்டுமல்லாமல், அந்த எல்லையையும் தாண்டிச் செல்வது எமது தொலைநோக்கு பார்வையாகும்.

- **உற்பத்தி காரணி சந்தை சீர்திருத்தம்**

இலங்கையில் வணிகம் செய்வதை எளிதாக்குவதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் காணி, தொழிலாளர் மற்றும் மூலதன சந்தைகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் உற்பத்தி காரணி சந்தை சீர்திருத்தங்களை நாங்கள் செயல்படுத்துவோம்.

காணி உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் காணி உரிமைகளை பாதுகாப்பதற்கும் தேசிய காணி சீர்திருத்த திட்டத்தை செயல்படுத்த எமது அரசாங்கம் உறுதியளித்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள “பிம் சவிய“ திட்டத்தை நிறைவு செய்து டிஜிட்டல் காணிப் பதிவைத் தயாரித்தல் முக்கிய முன்னுரிமையாக இருக்கும்.

மனித மூலதன மேம்பாட்டின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு, கல்வி முடிவுகளை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புக்கான திறன்களை மேம்படுத்துதல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிப்போம். போட்டித்தன்மை வாய்ந்த பணியாளர்களை உருவாக்க கல்வியின் தரம் மற்றும் நுழைவுகளை மேம்படுத்துவது முக்கியமானது. இலங்கையின் பணியாளர்களுக்கு எதிர்கால வேலைகளுக்கு ஏற்றதான திறன்கள் இருப்பதை உறுதிசெய்யும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மூலதன ஓட்டத்தை அதிகரித்து உள்நாட்டு மூலதன சந்தையை வலுப்படுத்த துரித சீர்திருத்தங்களை செயல்படுத்துவோம். பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொண்டு தற்பொழுது செயற்படுகின்ற முதலீட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நேரடி வெளிநாட்டு முதலீட்டை (FDI) மேம்படுத்தவும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் முக்கிய ஒழுங்குமுறைகள் மறுசீரமைக்கப்படும்.

- **கமத்தொழில், மற்றும் கால்நடை அபிவிருத்தி**

தற்போதுள்ள விவசாயக் கடன்களை இரத்து செய்வதன் மூலம் விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக அத்தியாவசிய கடன் வசதிகளை அணுக முடியும் என்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்

நாங்கள் 50 கிலோகிராம் உர மூட்டையை 5,000 ரூபாய்க்கு வழங்குவோம். இது எங்கள் விவசாயிகளுக்கு தொடர்ந்து கிடைக்கும் என்பதை உறுதி செய்வோம்.

விவசாயிகளை சுரண்டலில் இருந்து பாதுகாத்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக நெல் உற்பத்திக்கு மிக உயர்ந்த உத்தரவாத விலை கிடைக்கும் என்பதை நாங்கள் உறுதி செய்கிறோம்.

விவசாய பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான அதிக அறுவடை தரும் விதைகள், நாற்றுகள், பூச்சிக்கொல்லிகள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய அனைத்தையும் நியாயமான விலையில் தொடர்ந்து வழங்குவதை நாங்கள் உறுதி செய்கிறோம். விதை பாதுகாப்பும் அதன் முக்கிய பகுதியாக இருக்கும்.

"கமநல சேவை" விவசாய தகவல் சந்தை ஏற்படுத்தப்பட்டு, விவசாயப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க கமக்காரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கொள்வனவுகாரர்களுடன் தொடர்பு கொண்டு இந்த சந்தையின்

மூலம் விவசாய பொருட்களை விற்பனை செய்வதற்கும் அவர்களுடன் (Forward Sales Contract) முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்குமான சாத்தியத்தை ஏற்படுத்துதல்.

விவசாயப் பகுதிகளில் நடமாடும் மற்றும் இணைய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் டிஜிட்டல் தளத்தைப் (Digital platform ) பயன்படுத்தி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் விவசாய பொருட்களை கொள்வனவு செய்பவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய விவசாய நிறுவனங்கள் மறுவடிவமைப்பு செய்யப்பட்டு நவீனமயமாக்கப்படும்.

பெறுமதியைக் கூட்டுதல், பயிர் பன்முகப்படுத்துதல், நவீன விவசாய உள்ளீடுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் சந்தையை விரிவுபடுத்துதல் மூலம் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு மேம்படுத்தப்படும். விவசாய ஏற்றுமதிக்கு வரி ஊக்குவிப்புகளும் வழங்கப்படும்.

விவசாய மற்றும் வணிகப் பயிர்களை விரிவுபடுத்துவதற்கு தேவையான " நிலப் பயன்பாட்டுத் திட்டங்களை" தயாரித்தல்.

விவசாய காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும் வகையில், நிலப் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் காலாவதியான சட்டங்களை திருத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பயிரிடப்படாமல் கைவிடப்பட்டுள்ள பாரம்பரிய காணிகள் மற்றும் வயல்களை மீண்டும் பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

வனவிலங்குகளால் சேதமடையும் பயிர்கள் மற்றும் விளைபொருட்கள் உற்பத்தியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நாங்கள் ஒரு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவோம்.

விவசாயிகளுக்கு நிலையான விலையை வழங்குவதற்காக அவர்களின் உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்காக ஈரப்பதம் மற்றும் வெப்பநிலைக் கட்டுப்பாட்டு வசதிகளுடன் "பிரபாஸ்வர" குளிர்சாதனக்கூடம் மற்றும் இதர வசதிகளை நாடு பூராவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நிறுவுதல்.

பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் விலைக் கட்டுப்பாட்டிற்கும் நவீன தொழில்நுட்பத்தின்படி பண்ணைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும்

உதவிகளை வழங்குதல் அத்துடன் தட்டுப்பாடு இல்லாமல் விநியோகத்தை உறுதி செய்தல். உத்தரவாத விலை மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்படும்.

சொட்டு நீர் வழங்கல், பாதுகாப்பாக உட்புற செய்கை, பசுமை இல்லங்கள், ட்ரோன் தொழில்நுட்பம், AI தொழில்நுட்பம் போன்ற நவீன முறைகளை விவசாயத்தில் அறிமுகப்படுத்துவதற்கான உதவி மற்றும் ஒத்துழைப்பை வழங்குதல்.

தாங்கிக் கொள்ளக் கூடிய கடன் வசதிகள் நுழைவுகளுடனான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய தொழில்முனைவோரை ஊக்குவிக்க நடைமுறையொன்றை உருவாக்குதல்.

தேயிலை, இறப்பர், தென்னை, கரும்பு, கறுவா மற்றும் பிற ஏற்றுமதி பயிர்களை ஊக்குவிக்க தேவையான அரசாங்க ஆதரவை தொடர்ந்து வழங்குதல்.

நெல் விவசாயியை சுரண்டி நுகர்வோருக்கு அரிசியை அதிக விலைக்கு விற்கும் பெரிய அளவிலான அரிசி ஆலை மாபியாவைக் கட்டுப்படுத்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுடன் "சக்தி சஹல்" திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

இலங்கையின் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அவர்களின் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களின் நீண்டகால சுபீட்சத்தை உறுதிப்படுத்துவதற்கும் இலக்கு நோக்கிய கொள்கைகளை செயற்படுத்த நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

கறுவா மற்றும் மிளகு உள்ளிட்ட மசாலாப் பொருட்களுக்கான சர்வதேச ஏற்றுமதி சந்தையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். பெறுமதி சேர் உற்பத்திகளை அறிமுகப்படுத்தி, உற்பத்திகளின் தரம் மற்றும் தரத்தை உறுதிப்படுத்த தேவையான தொழில்நுட்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பயிர்களை விரிவுபடுத்தி, ஆராய்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்தவத்துக்கு நவீன தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.

- **காணி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்**

காணிப் பயன்பாட்டை உகந்ததாக்கி, சந்தை செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த அரசாங்கம் விரிவான தேசிய காணி வங்கியை நிறுவும். காணி என்பது பொருளாதார வளர்ச்சி மற்றும் சந்தை இயக்கவியலின் முக்கிய காரணி என்பதை அங்கீகரித்து, இந்த முயற்சி காணித் தகவலை மையப்படுத்தி, திறமையான காணி ஒதுக்கீட்டிற்கு

வசதி செய்து, நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்.

அரச காணிகளில் வசிக்கும் காணி அனுமதி பெற்றவர்களுக்கு 5 ஆண்டுகளுக்குள் உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நீர் மூலாதாரங்கள் மற்றும் நீரேந்து பகுதிகளை பாதுகாக்க சட்டம் வலுப்படுத்தப்படும்.

நாட்டின் உள்ளகப் பகுதியில் உள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை அதிகபட்ச அளவில் பராமரிக்க தேவையான முதலீடுகளை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் தேவையான நீர் தேவைப்பாட்டை அடைய அனைத்து சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் புனரமைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்படுவதும் உறுதி செய்யப்படும்.

- **போக்குவரத்து - நெடுஞ்சாலை, கடல் மற்றும் ஆகாயம்**

சுற்றாடலுக்கு உகந்த, நவீன பேருந்துகள், புகையிரதங்கள் இலத்திரனியல் மயமாக்கல் , இலகு புகையிரத முறைமை மற்றும் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தால் இயங்கும் Intelligent Transport Systems (ITS) பல்வகை பொதுப் போக்குவரத்து அமைப்பை உருவாக்குதல்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பணிகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும். கஹதுடுவ தொடக்கம் பெல்மதுல்ல வரையான ருவன்புர அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் எமது பிரதான போக்குவரத்து வலையமைப்பின் அடிப்படைப் பகுதியாகக் கருதப்படுவதால், அதன் நிர்மாணப் பணிகள் கட்டம் கட்டமாக முடிக்கப்படும். கிராமியப் பாதைகளை மறுசீரமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தற்போதைய அரசாங்கத்தால் நிறுத்தப்பட்ட களனிவேலி புகையிரத பாதை உள்ளிட்ட புகையிரதத் துறை நவீனமயமாக்கல் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும்.

Multi-Lane Free Flow - MLFF அமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் அதிவேக நெடுஞ்சாலைகளின் செயல்திறனை மேம்படுத்துதல்.

வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் போட்டித்தன்மையை ஊக்குவிக்க, இலங்கை போக்குவரத்து சபைக்கு (SLTB) ஒரு இலக்கு நோக்கிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் தனியார் துறை போக்குவரத்து சேவைகளுடன் போட்டியிட்டு சேவை வழங்கும் திறனை அடைய முடியும்.

சுற்றுலாத் துறைக்கு பெரும் உதவியாக இருக்கும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை விரைவாக முடிப்பதற்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் நாட்டில்

உள்ள உள்நாட்டு விமான நிலையங்களை சிவில் விமான நிலையங்களாக மாற்றுதல்.

இலங்கையின் தனித்துவமான மூலோபாய அமைவிடத்தைக் கருத்தில் கொண்டு, துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தனியார் துறையினருக்கு அழைப்பு விடுப்போம்.

- **மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள்**

நீல பொருளாதார (Blue economy) கோட்பாடுகளின் அடிப்படையில், இலங்கையின் கடல் எல்லைக்குள் நீர்வாழ் வளங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்தி, அரசு-தனியார் துறை கூட்டாண்மைகள் (PPP) மூலம் நிலையான பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்போம்.

மீனவ சமூகத்தின் பொருளாதார பலத்தை அதிகரிக்க, அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் தொழில்முனைவோருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டத்தை உருவாக்கி அவர்களின் தொழில்முயற்சித் திறன்களை மேம்படுத்த விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் Internet of Things (IoT) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடித்தல் முன்கணிப்புத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் அந்தத் தகவலை மீனவ சமூகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்க தேவையான எளிய முறைகளை அமைத்தல்.

மீன்பிடி சுற்றுலாத் தொழிலை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அதன் மூலம் மீனவ சமூகத்தின் பொருளாதார பலத்தை மேம்படுத்த மாற்று வருமான ஆதாரங்களை உருவாக்குதல். மீனவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு மாற்றுத் தொழில்முனைவுக்கான பயிற்சியும் ஊக்கப்படுத்தலும்.

நாடு முழுவதும் மீன் வளங்களின் விநியோகத்தை முறைப்படுத்துவதன் மூலம், நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் மக்கள் புதிய மீன்களைப் பெறுவதை சாத்தியமாக்குதல்.

நாட்டின் உள்நாட்டு நீர்வழிகளின் பயன்படுத்தப்படாத திறனை உணர்ந்து, தேசிய மீன்வளத் துறையின் முக்கிய கூறாக நன்னீர் மீன்வளர்ப்பு துறையை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிடும்.

எளிதான சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் இலக்கு சந்தைப்படுத்தல் உத்திகளை உள்ளடக்கிய மேம்படுத்தப்பட்ட ஆதரவு நடவடிக்கைகள் மூலம் அலங்கார மீன் தொழிலுக்கும் அதன் ஏற்றுமதிக்கும் வசதி செய்யப்படும்.

வெளிநாட்டு சட்டவிரோத மீன்பிடி கப்பல்களின் சட்டவிரோத நடவடிக்கைகளை இராஜதந்திர ரீதியாக

தீர்க்க மற்றும் கண்காணிக்க தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல்.

மீன்பிடி துறைமுகம் மற்றும் கப்பல் கட்டும் இடங்களை மேம்படுத்த தேவையான முதலீட்டுக்கு முன்னுரிமை வழங்குதல்.

- **சுற்றுலாத் துறை**

ஐக்கிய மக்கள் சக்தி தயாரித்த "இலங்கைக்கான சுற்றுலாத்துறைக் கொள்கை" நிலையான மற்றும் அனைத்து வளர்ச்சி உள்ளடக்கத் திட்டம்" (Tourism Policy for Sri Lanka: A Blueprint for Sustainable and Inclusive Growth) கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கையின் சுற்றுலாத் துறையை சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்து அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ளுவதற்கான நடவடிக்கையை எடுத்தல் அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்போதைய அரசாங்கத்தால் கையொப்பமிடப்பட்ட ஊழல் நிறைந்த "VFS விசா ஒப்பந்தத்தை" இரத்து செய்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறைந்த விலையில் விசாக்களை எளிதாகப் பெறுவதற்கான நவீன முறைமை உருவாக்கப்படும்.

அத்துடன், இலங்கையில் நிகழ்ந்த மிகப் பெரிய ஊழலான இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

100 நாடுகளின் குடிமக்கள் முன்கூட்டியே விசா பெற வேண்டிய தேவையின்றி ஒரு மாத காலத்திற்கு இலங்கைக்கு வர அனுமதிக்கும் விசா இல்லாத நுழைவுத் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தும்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு நாட்டிற்குள் எளிதாக வருவதற்கான வசதி செய்வதற்காக வெளிநாடு வாழ் இலங்கைப் பிரஜைகள் திட்டத்தை (Overseas Citizens of Sri Lanka Programme) செயல்படுத்துவதை துரிதப்படுத்தி அவர்களுக்கு இலங்கையின் வதிவிடக்காரர்களாக செயற்படுவதற்கு வசதிகளைச் செய்வோம்.

கொழும்பு நகரத்தை தெற்காசியாவின் மிகவும் அழகான மற்றும் முதலீட்டாளர் நட்பு நகரமாக மாற்றுவோம். இந்த நகர்ப்புற மறுமலர்ச்சி மற்றும் சுற்றுலா சந்தை பன்முகப்படுத்தலுடன், கொழும்பு நகரம் பிராந்திய வணிக மற்றும் பொழுதுபோக்கு மையமாக நிலைநிறுத்தப்படும், இது அனைத்து பருவங்களிலும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

சுற்றாடல் நட்பு எண்ணக்கருத்துகளுக்கு முன்னுரிமை அளித்து, உள்ளூர் சுற்றுலாத் தொழிலை மீண்டும்

வலுப்படுத்தும் அதே வேளையில், இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாக்கும் நிலையான நடைமுறைகளை உறுதி செய்து, சிறுத்தை பார்வையிடல் சிறப்பம்சமாக கொண்ட முன்னணி வனவிலங்கு இலக்காக இலங்கையின் சுற்றுலாத் துறை மேம்படுத்தப்படும்.

மொழித் திறன் மற்றும் தொழில்முறை திறன் மேம்பாட்டிலும் கவனம் செலுத்தி, அரசு-தனியார் கூட்டாண்மை மூலம் முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஆகிய இரு துறைகளிலும் சுற்றுலாத் துறைக்கான விரிவான பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

- **விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி**

செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence) இலங்கையில் மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (Research & Development) மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டிற்காக இலங்கையின் அரசு மற்றும் அரசு சாரா பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்து பெறக்கூடிய வகையில், ஆண்டுக்கு ரூபாய் 5 பில்லியன் "அரசு ஆராய்ச்சி நிதி"யை அரசாங்கம் நிறுவும்

வணிக ரீதியாக முக்கியமான ஆராய்ச்சிகளில் ஈடுபடும் பல்கலைக்கழக மற்றும் வெளிப்புற இளம் ஆராய்ச்சிக் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க தொழில்முயற்சி ஆராய்ச்சி வசதிகள் நிலையம் (Business/Research Incubator) ஹோமாகம தொழில்நுட்ப நகரத்திற்கு அருகில் உருவாக்கப்படும்.

முன்னேறிய நாடுகளில் உள்ளது போல, பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் பட்டத் தேவைகளுக்காக மேற்கொள்ளும் சிறந்த ஆராய்ச்சிகளை நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியமான திட்டங்களாக செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்படும்.

நாங்கள் நவீன தொழில்நுட்பத்துடனான 25 தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

- **கைத்தொழில் துறை**

மில்லேவ, மில்லெனிய மற்றும் பிங்கிரிய ஏற்றுமதி வலயங்களில் நடவடிக்கைகளை விரைவுபடுத்தி, அனைத்து மாவட்டங்களிலும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 25 புதிய தொழில்துறை வலயங்களை முன்முயற்சியுடன் நிறுவுதல். சமநிலையான பிரதேச அபிவிருத்தியை உறுதிசெய்து, நாடு முழுவதும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் இதன் நோக்கமாகும். இந்த வலயங்களில் ஒவ்வொரு வலயத்திலும் ஒரு உற்பத்தி தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிப்பதன் மூலம்

செயல்படுத்தப்படும்.
தொழிற்சாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக 341 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இலங்கையின் இயற்கை வளங்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, நிலைத்தொழில்நுட்பத்தில் முன்னணி நிலையை அடைவதற்காக, நாடெங்கும் "பசுமை தொழில்நுட்ப புத்தாக்க நிலையங்கள் (Green Tech Innovation Hub)" என்ற ஒரு வலைப்பின்னலை உருவாக்கி. இந்த முன்னெடுப்பின் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, உயர் திறன் வாய்ந்த வேலை வாய்ப்புகளை உருவாக்கி, சர்வதேச சந்தையில் சுற்றுச்சூழல் நட்பை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளில் முன்னோடியான இடத்தை இலங்கை அடைந்து கொள்வதற்கு வழிவகுக்கப்படும்.

"ஒரு மில்லியன் தொழில்முயற்சிகள்" தொடக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக '18+ புதிய தொழில்முயற்சிகள் கருத்திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும். இந்தக் கருத்திட்டத்தில் இளைஞர் தொழில்முயற்சியாளர்கள் மட்டுமன்றி குறிப்பாக புதிய பட்டதாரிகளும் உள்ளடக்கப்படுவதுடன் அவர்களுக்கு தொழில்முயற்சிக்கான ஆரம்பக் கடன், ஆலோசனைகள் மற்றும் அத்தியாவசிய வழிகாட்டலுடன் அவர்கள் வலுப்படுத்தப்படுவர்.

புதிய கைத்தொழில்களைப் பதிவு செய்வதற்கான இலகுபடுத்தப்பட்ட "பன்முக சேவை நிலையங்களை" (One-Stop Shop) நிறுவுதல் மற்றும் அதன் மூலம் தொழில் முனைவோருக்குத் தேவையான அனைத்து அரச அனுமதிகளையும் ஒரே இடத்தில் பெற்று, வினைத்திறனுடன் தங்கள் வணிகங்களைப் பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்படும். இந்த முன்னெடுப்பு மூலம் நிர்வாகத் தடைகளை கணிசமாகக் குறைத்து சட்ட, ஒழுங்குவிதிகளைத் தளர்த்தி இலங்கையில் புதிய தொழில்முயற்சிகளைத் ஆரம்பிப்பதற்கான நடைமுறை துரிதப்படுத்தப்படும்.

பாரம்பரிய உற்பத்தி அறிவை தங்கள் கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக பாதுகாக்கும் இலங்கையின் கிராம, குடிசை மற்றும் பாரம்பரிய கைவினைத் தொழில்கள் தனித்துவமான துறையாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்தத் தொழில்கள் விடுதி சந்தையில் விரித்தியடைய அனுமதிக்கும் வகையில், மேம்படுத்தப்பட்ட வசதிகள், சந்தை நிலைப்படுத்தல் நிபுணத்துவம், செலவு குறைந்த உற்பத்தி உத்திகள், பொதியிடல் மேம்பாடுகள் மற்றும் மூலதனம் பெறுவதற்கான நிதி உதவி ஆகியவற்றின் மூலம் இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்குவோம்.

கூட்டுறவு சங்கங்கள் முழுமையாக அரசியல் நீக்கம் செய்யப்படும், மேலும் சட்ட சீர்திருத்தங்கள் மூலம் கூட்டுறவு வங்கிகள் வலுப்படுத்தப்பட்டு சேமிப்புகள் பாதுகாக்கப்படும். இந்த சீர்திருத்தங்கள் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப நவீனமயமாக்கல் மூலம் இலங்கையின் கூட்டுறவுத் துறையை புத்துயிர் பெறச் செய்வோம். இந்த நடவடிக்கைகள் அடிமட்ட நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதன் மூலம் செயற்பாட்டு திறனை மேம்படுத்தி, வணிக மாதிரிகளை பன்முகப்படுத்தி, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அவற்றின் சமூகங்களுக்கு பரஸ்பர நன்மைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதாக இருக்கும்.

பொருளாதாரம் முழுவதும் புத்தாக்கம், வர்த்தக முத்திரைகள், புலமைச் சொத்துரிமைகள் மற்றும் செயற்பாட்டு திறனை சிறப்பாக பாதுகாக்கவும் மேம்படுத்தவும் பரந்த நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சட்டங்களை புதுப்பித்தல்.

நமது பொருளாதாரத்திற்கு ஆடைத் துறையினால் கிடைக்கப் பெற்றுள்ள மதிப்புமிக்க பங்களிப்பை நாம் பாராட்டுகிறோம். அதன்படி, ஊழியர்கள் மற்றும் கைத்தொழில்துறை ஆகிய இரண்டின் நல் இருப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஒரு விசேட சாசனத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்துவோம். இந்த சாசனம், உலகளாவிய உற்பத்தி மதிப்புச் சங்கிலியின் இயக்க சக்தியாக திறன்மிக்க உழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும். இதைக் கருத்தில் கொண்டு, அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் ஆடைத் துறை ஊழியர்களுக்கு காப்புறுதி மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்கும் தலையிடுவோம்.

- **சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் (MSME) துறை**

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் துறை எதிர்கொள்ளும் நெருக்கடியான நிலைமையை உணர்ந்த முதல் அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி ஆகும். பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இத்துறையின் தற்போதைய நிலைமை குறித்து நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்துள்ளோம். மேலும், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் துறையின் பிரதிநிதிகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), உலக வங்கி (WB), ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்ற முக்கிய சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டங்களை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்தோம்.

ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் இருந்து வந்த அழுத்தத்திற்கு பதிலளிக்கும் வகையில், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் துறைக்கு சில நிவாரணம் அளிக்கும் வகையில் அரசாங்கம் 2024 டிசம்பர் 15 வரை "பராட்டே" சட்டத்தின் அமுலாக்கத்தை இடைநிறுத்தியது. எதிர்கால அரசாங்கத்தின் கீழ் இந்த இடைநிறுத்த காலத்தை கணிசமான காலத்திற்கு நீடிக்க நாங்கள் உறுதியளித்துள்ளோம். இதற்கு மேலதிகமாக, அனைத்து அரச மற்றும் வணிக வங்கிகளிலும் பிரத்தியேக நுண், சிறிய மற்றும் நடுத்தர கடன் பிரிவுகளை நிறுவுவதை கட்டாயமாக்குவோம். இந்த பிரிவுகள் ஒவ்வொரு நிலைமையையும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்யும். மத்திய வங்கியின் வழிகாட்டுதலின் கீழ், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் பிரிவுக்கு நிலையான ஆதரவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தி, உண்மையிலேயே பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு சலுகை வட்டி விகிதங்களுடன் தற்போதுள்ள கடன்களை நீண்ட கால கடன்களாக மாற்றுவதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

டுக் டுக்: முச்சக்கர வண்டி சாரதிகளின் தினசரி பெற்றோல் செலவைச் சேமிக்கும் வகையில், முச்சக்கர வண்டிகளின் எரிபொருள் என்ஜின்களை மின்சார என்ஜின்களாக மாற்றுவதற்கு வட்டிச் சலுகை வசதியை வழங்குவோம். கடன் திட்டம் வங்கி முறைமையின் மூலம் நிர்வகிக்கப்படும்.

சுபீட்சமாக வளரும் துறையை உருவாக்கி, கணிசமான எண்ணிக்கையிலான தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்ற, அனைத்து தொடர்புடைய காரணிகளையும் ஒருங்கிணைத்து, அனைத்து தரப்புகளின் கருத்துக்களையும் கேட்டறிந்து, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் குறித்த தேசியக் கொள்கையை உருவாக்குவோம்

- **இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறை**

அகழ்வு அனுமதிகளை எளிதாக்க வினைத்திறன் வாய்ந்த, வேகமான மற்றும் வெளிப்படையான முறைமையை நிறுவுதல்.

நவீன அகழ்வு தொழில்நுட்பங்களை பெறுவதற்கு சிறிய அளவிலான சுரங்க தொழிலாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குதல்.

நியாயமான மற்றும் சமத்துவமான முறையில் அகழ்வுக்கு அதிக நிலப்பரப்பை திறத்தல்.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தலையீடும் இல்லாமல் எளிதான ஏற்றுமதி செயற்பாடுகள் உறுதி

செய்யப்படும் பொருட்டு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை மறுசீரமைக்கப்படும். அனைத்து ஏற்றுமதியாளர்களும் தங்கள் சுங்க அறிக்கைகளை சமர்ப்பிக்க மற்றும் தாய்லாந்து மற்றும் ஹொங்கொங் போன்று சமமாக தங்கள் அலுவலகங்களிலிருந்து நேரடியாக பொருட்களை ஏற்றுமதி செய்ய சுங்க இணையத் தளத்திற்கு நேரடி பிரவேசம் கிடைக்கும்.

அனைத்து இலங்கையர்களும் முற்றிலும் இணையவழி முறைகள் மூலம் கூரியர் மற்றும் அஞ்சல் சேவைகளைப் பயன்படுத்தி திறமையான மற்றும் ஏற்றுமதி வழிமுறைகள் மூலம் உலகின் பிற நாடுகளுடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை வர்த்தகம் செய்ய முடியும்.

தொழில்துறையின் வருமான வரி மதிப்பீட்டுப் புரள்வு அடிப்படையில் மேற்கொள்ளல் வேண்டும் - தற்போதைய நிகர இலாபத்தின் அடிப்படையிலான 30% வரி விகிதம் திருத்தம் செய்வது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

பெறுமதி சேர் மற்றும் மறு ஏற்றுமதிக்காக இலங்கைக்கு அதிக இரத்தினக்கற்கள் வருவதை ஊக்குவிக்க, இரத்தினக்கற்கள் இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரியை நீக்குதல் கவனத்தில் கொள்ளப்படும்.

தன்னுடன் கொண்டு வரப்படும் இரத்தினக்கல் பொதிகளின் இறக்குமதிக்கு பொதியொன்றுக்கு 200 அமெரிக்க டாலர் என்ற கட்டண முறையை மீண்டும் அறிமுகப்படுத்துதல் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும்.

அந்நிய செலாவணிக்கான அனைத்து இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனைகளும் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

சட்டப்பூர்வ ஆபரண உற்பத்தியாளர்களுக்கு, அவர்களின் தங்க இறக்குமதிக்கான கொடுப்பனவு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுமதி செயல்பாட்டின் ஒரு பகுதியாக ஈட்டப்பட்ட அந்நிய செலாவணி மூலம் செலுத்தப்படும்போது, தீர்வை வரியை நீக்க பரிந்துரைக்கப்படுகிறது.

முடிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான பெறுமதி சேர் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்க இந்த பொருட்களின் மீதான தீர்வை வரி நீக்கப்படும்.

இது முக்கிய வர்த்தக மையங்களுக்கு நெருக்கமாக கொண்டு வந்து துறையின் திறன் அபிவிருத்தியை உறுதி செய்யும் பொருட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் முழுமையாக மறுசீரமைக்கப்படும்,

- **நிர்மாணத்துறை**

நியாயமான மற்றும் புத்தாக்க கட்டுமானத் தொழிலை உருவாக்க "Build Sri Lanka Fair" நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்த விரிவான கொள்கை சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்முயற்சிகளுக்கு இடையே நியாயமான போட்டியை உறுதி செய்வதன் மூலம் ஒப்பந்ததாரர் தர குழுமங்களை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். கட்டிட தகவல் மாதிரியாக்கம் (Building Information Modeling) போன்ற முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டில் முன்னணி வகிப்பதற்காக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவையும் இது நிறுவும். இந்த முன்முயற்சி துறையை நவீனமயமாக்கி, உள்நாட்டு பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்து, வலுவான, திறமையான மற்றும் வெளிப்படையான கட்டுமான சூழலமைப்பு உருவாக்கப்படும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்மாணத் துறையில் ஒழுங்குபடுத்தல் இணக்கத்தை மேம்படுத்துவதற்கும் "Swift Build" Smart Resolve திட்டம் அமுல்படுத்தப்படும். இந்தத் திட்டம் பிரச்சினைகளை திறமையாகத் தீர்ப்பதற்காக கட்டுமானத் திட்டங்களுக்கான நிலையான ஆலோசனைக் குழு (SACCP) மற்றும் உயர் மதிப்புள்ள திட்டங்களை கண்காணிப்பதற்காக கட்டுமானத் திட்டங்களுக்கான தேசிய செயல்பாட்டுக் குழு (NCCP) ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல். நிலையான ஏல ஆவணங்களுக்கு இணங்குவதை கட்டாயப்படுத்துவதற்கும், ஒத்திசைவை உறுதி செய்வதற்கும், மோதல்களைக் குறைப்பதற்கும் கட்டுமானத் தொழில் மேம்பாட்டு ஆணைக்குழுவிற்கு (CIDA) அதிகாரம் அளிக்கப்படும்.

நிறுத்தப்பட்ட கருத்திட்டங்களை மூலோபாய மதிப்பாய்வுடன் மீண்டும் தொடங்குதல் செலவு குறைந்த தீர்வுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்து, ஒப்பந்ததாரர்கள் மற்றும் அரசாங்கத்தின் மீது மேலும் நிதிச்சுமையை ஏற்படுத்தாமல், அத்தியாவசியமற்ற கருத்திட்டங்களை இரத்து செய்வதன் மூலமோ அல்லது மறுசீரமைப்பு செய்வதன் மூலமோ, இந்த அத்தியாவசிய கருத்திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கு எதிர்கால அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யும்.

கட்டுமான சேவைகள் மற்றும் தயாரிப்புகளின் ஏற்றுமதியை ஊக்குவித்தல் அரசாங்கம் ஏற்றுமதித் தொழிலாக கட்டுமானத் துறையை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். எல்லைகளுக்கு இடையிலான சான்றளிப்புக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், இராஜதந்திர ஆதரவு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பை

தொடங்குதல் ஆகியவற்றின் மூலம் இதை செயல்படுத்த முடியும்.

விநியோக சங்கிலியை நவீனமயமாக்கி நிர்மாணிப்பு உள்ளீடு உற்பத்தியை உள்நாட்டில் மேற்கொள்ளுதல்.

சம தளத்தில் செயல்படுவதற்கான வாய்ப்பை உறுதி செய்து, நியாயமான போட்டி மற்றும் ஒழுங்குமுறை அமுலாக்கத்திற்கான இடத்தை திறத்தல்.

பிடித்து வைக்கும் நிதியங்களுக்கு பதிலாக உத்தரவாதங்கள் அல்லது பிணைமுறிகளை வைப்பதன் மூலம், சம்பந்தப்பட்ட வேலைகள் 60% முடிந்த பிறகு பிடித்து வைத்த நிதியை கட்டாயம் சேவை வழங்குநர் விடுவிக்க வேண்டும் என்று அரசாங்கம் கட்டாயப்படுத்தும்.

- **மின்சக்தி மற்றும் வலுசக்தி**

நுகர்வோருக்கு நியாயமான மற்றும் போட்டி விலைகளில் மின்சாரம் வழங்குவதை உறுதிசெய்ய மின்சாரத் துறையில் ஊழல் மற்றும் திறமையின்மையை அகற்றத் தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் எரிவாயு துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படும், மேலும் முற்றிலும் ஊழலற்ற மற்றும் திறமையான மின்சார கொள்முதலுக்கான உலகத் தரத்திற்கு ஏற்ற நடைமுறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

ஏற்கனவே தேசிய மின்சார முறைமைக்கு 1,300 மெகாவாட்டைச் சேர்த்துள்ள "சூரிய சக்தி போர்" (Battle for Solar Energy) திட்டம் மேலும் ஊக்குவிக்கப்படும். சலுகை வட்டி விகிதத்தில் "சூரிய மின் நிலையங்களை" அமைக்க வீட்டு உரிமையாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். 5 ஆண்டுகளில் ஒரு மில்லியன் வீடுகளை சூரிய சக்தியால் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

1,200 மெகாவாட் கடலோர காற்றாலை மின் திட்டத்திற்கு (Off-shore) முன்னுரிமை அளிக்கப்படும் மற்றும் நாட்டில் கரையோர காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின்சாரத்தை மேம்படுத்த வெளிப்படையான போட்டி முறைகள் அறிமுகப்படுத்தப்படும். இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மின்சார முறைமை 05 வருடங்களுக்குள் Smart Grid ஆக மாற்றப்படும்.

தற்போதுள்ள அனல் மின் நிலையங்கள் 02 ஆண்டுகளுக்குள் எல்என்ஜியில் இயங்கும் வகையில் மேம்படுத்தப்படும் மற்றும் உள்நாட்டு

வலுசக்தித் தேவைகளுக்கு என்ஜி, எல்என்ஜி மற்றும் சிஎன்ஜியைப் பயன்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அரச மற்றும் தனியார் தலையீடு மூலம் வழங்கப்படும்.

காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின்சாரத்துறை உட்பட புத்துயிர்ப்பு வலுசக்திக்குத் தேவையான இயந்திர பொறிமுறைகளை உற்பத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான வசதிகளை நாட்டில் உருவாக்க தேவையான நடவடிக்கைகள் அரச மற்றும் தனியார் துறைகளின் தலையீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மின்சார ஊழியர்களின் உரிமைகளுக்கு எதிரான மற்றும் நுகர்வோர் உரிமைகளுக்கு எதிரான விதிகளை நீக்கி வினைத்திறன் வாய்ந்த ஸ்மார்ட் மின்சார அமைப்பை நாட்டில் கட்டியெழுப்ப முன்னுரிமை அளிக்கப்படும் .

இலங்கையின் நிலையான வலுசக்தி திறனைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு தேவைகளை தாண்டி ஏற்றுமதி செய்வதற்கான சாதகமான வாய்ப்பு உள்ளது. பசுமை ஐதரசன் உற்பத்தியில் ஈடுபட்டு அதற்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறோம்.

பிராந்திய வலுசக்தி இணைப்பு திட்டங்களைப் பின்பற்றுவோம்.

## அனைத்துப் பிரஜைகளையும் வலுப்படுத்தல்.

- **கல்வி, தொழில்முறை பயிற்சி மற்றும் இளைஞர்கள்**

கல்வி என்பது அடிப்படை உரிமை. மனித மூலதன மேம்பாடு எமது முன்னுரிமை.

தேசத்தின் மனித மூலதன மேம்பாட்டிற்கு ஆசிரியர்கள் நிறைவேற்றும் முக்கியமான பங்களிப்பை அங்கீகரித்து, அரசாங்கம் இலங்கை முழுவதும் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவச பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்கும்.

கல்வித்துறையில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சேவை தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க 2025 ஜனவரிக்கு முன்னர் கொள்கை முடிவுகளை எடுத்து செயல் திட்டத்தை உருவாக்குதல்.

இலங்கையின் அனைத்து பாடசாலைகளுக்கும் 100% மின்சாரம், நீர் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வளங்களை வழங்குவதன் மூலம் ஒவ்வொரு பாடசாலையையும் ஸ்மார்ட் பாடசாலையாக மாற்றுவதற்கான வழிவரைபடத்தை உருவாக்குதல்.

மதத்தைக் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும். பாடசாலைகளில் மதக் கல்வி கற்பிக்கும் பணி, மதக் கல்வி கற்பிப்பதற்கான தகுதி பெற்ற ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும்.

விரிவாக்கப்பட்ட "பிரபஞ்சம்" திட்டத்தின் மூலம் பாடசாலைகளில் டிஜிட்டல் கற்றல் தளங்களுக்கான அணுகலை உறுதி செய்யும் முன்னுரிமையாக இலங்கையை முன்னோக்கி செலுத்தும் முயற்சிகள் முன்னிலைப்படுத்தப்படும். இதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளடக்கங்களை வழங்கும் முறைகளில் முழுமையான நவீனமயப்படுத்தல் மேற்கொள்ளப்படும். தரமான கல்வி சேவைகளைப் பெறும் திறனை அதிகரிக்கும் இந்த திட்டம் தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். ஸ்மார்ட் பாடசாலைகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்க தாராள நன்கொடையாளர்களை ஈர்க்கும் வகையில் 10,096 வளர்ப்புப் பாடசாலைகள் (Foster Schools)திட்டம் உருவாக்கப்படும்.

உலகளாவிய கூட்டாண்மைகள், கலாச்சார பரிமாற்றங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையிலான கூட்டு கற்றல் வாய்ப்புகளை வளர்ப்பதற்காக பாடசாலை இணைப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

பாடசாலைகளின் வசதிகளைப் பராமரிப்பதற்கும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், பிரதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒவ்வொரு பாடசாலையிலும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் ஒன்று நிறுவுவது கட்டாயமாக்கப்படும்.

ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதன் மூலம் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், அழகியற்கல்வி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் STEAM கல்வியை உருவாக்கும் பணியை 2025 ஜனவரி முதல் ஆரம்பித்தல்.

பாடசாலை பாடத்திட்டத்தை மறுசீரமைக்கும் போது, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் துறையின் மனிதவள நிபுணர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப போக்குகளுக்கு உரிய இடம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளைகள் மிகவும் அழுத்தத்திற்கு உள்ளாகும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை அழுத்தத்திலிருந்து அவர்கள் விடுபடும் வகையில் எளிமையாக்கி ஒழுங்கமைத்தல்.

பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் ஆரம்பக்கல்வியின் அடிப்படை முக்கியத்துவத்தை அங்கீகரித்து, பல்துறை ஆலோசனைக் குழுவுடன் கூடிய ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை நிறுவி, சிறுவர் நட்பு மற்றும் நவீன உட்கட்டமைப்பை அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி மற்றும் அங்கீகாரத்தை மேம்படுத்தி, பெற்றோர் பங்களிப்பையும் ஊக்குவிப்போம்.

மாணவர் பாடசாலைப் பருவத்தின் ஆரம்ப கட்டத்திலேயே ஆங்கில மொழியை நன்கு புரிந்து கொள்வதற்கும், பேசுவதற்கும், எழுதுவதற்கும் தேவையான திறன்களை பெற்றுக் கொள்ளும் வகையில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை கல்வி வழங்கப்படும், இதற்காக நவீன தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படும்.

6 முதல் 13 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்துப் பாடசாலை மாணவிகளும், மாதவிடாய் சுகாதார உற்பத்திப் பொருட்களை வாங்குவதற்காக, தங்கள் விருப்பப்படி மாதாந்த நிதிப் பரிமாற்றத்தைப் பெறும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

பல்கலைக்கழக துறையில் உள்ள தொழில்முறை பிரச்சினைகளை தீர்க்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை உடனடியாக மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தல். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்தை சீர்திருத்தி பல்கலைக்கழகங்களின் சுயாட்சியை வலுப்படுத்துதல். அரசு, அரசு சாரா

மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை கண்காணிக்க உயர்கல்வி ஆணைக்குழுவை நியமித்தல். அனைத்து அரசு மற்றும் அரசு சாரா பல்கலைக்கழகங்களின் சர்வதேச தரவரிசையை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அவற்றின் சர்வதேச அங்கீகாரத்தை உயர்த்துதல்.

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்தி இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள்/இந்திய முகாமைத்துவ நிறுவனங்கள் (IIT/IIM) போன்ற ஒரு பல்கலைக்கழகத்தை இலங்கையிலும் நிறுவ தேவையான வசதிகளை ஏற்படுத்த இலங்கை குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கல்வித் தரநிலைகள், ஆராய்ச்சி ஒத்துழைப்புகள் மற்றும் மாணவர் பரிமாற்றத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு ஆரம்பங்களை ஊக்குவித்தல்.

அரசு சாரா மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்விக்காக தற்போதுள்ள அரசாங்க கடன் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்முறை பயிற்சி நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படும்.

தொழில்முறை பயிற்சி பாடத்திட்டங்கள் தற்போதைய சந்தை தேவைகளுக்கு ஏற்ப விரிவாக புதுப்பிக்கப்பட்டு தரப்படுத்தப்படும். இதன் மூலம் பட்டதாரிகள் துறைக்கு ஏற்ற மற்றும் தேவைப்படும் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பது உறுதி செய்யப்படும்.

நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் இளைய சமுதாயம் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழக்கூடிய பிரஜைகளாக இருக்க வேண்டும். அவர்களின் உழைப்பு பங்களிப்பை நாட்டின் வளர்ச்சிக்கு பயனுள்ள வகையில் பயன்படுத்த, கல்வி, தொழில் பயிற்சி, தொழில்முனைவு ஆகியவற்றுக்கான நவீன வசதிகளை வழங்குவதன் மூலம், அவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புதிய வாய்ப்புகளை அடைந்து கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

- **மகளிர் மற்றும் சிறுவர் வலுப்படுத்தல்**

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை தொடங்க அரசாங்கம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும், மேலும் தேவையான நிதி ஊக்குவிப்புகளையும் வழங்கும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பொருத்தமான பகல்நேர பராமரிப்பு நிலையங்களை அமைக்கவும், இந்த பகல்நேர பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்த தேவையான அனைத்து ஆதரவையும் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

பணியாளர்களிடையே அதிக பெண்கள் பங்கேற்புக்கு தேவையான ஊக்குவிப்புகளை வழங்கி மகப்பேறு விடுமுறை செலவை அரசாங்கம் ஏற்கும்.

பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் குறைந்தபட்சம் 25% பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த தேவையான சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

பாலின சமத்துவம், பெண்களைப் வலுப்படுத்தல், சிறுவர் பாதுகாப்பு மற்றும் உடல் மற்றும் மன நலனை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணியொன்று 03 மாதங்களுக்குள் நிறுவப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தற்போது இயற்றப்பட்டுள்ள சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளைப் பெற நிபுணர் குழு நியமிக்கப்பட்டு, அந்த பரிந்துரைகள் ஓராண்டுக்குள் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் மகளிர் மற்றும் சிறுவர் பணியகம் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டு செயற்படுத்தப்படும்

பெண்களை முதன்மையாகக் கொண்ட குடும்பங்களை பலப்படுத்துவதற்கான மாற்று வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் .இதன்மூலம் பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் பாதுகாப்புடனும் போசாக்குமிக்கதுமான சூழலில் வாழ்வதற்கான உத்தரவாதத்துக்கு முழுமையான ஒத்துழைப்பும் பாதுகாப்பும் வழங்கப்படும்.

நுண்நிதி நிறுவனங்களின் ஒழுங்குமுறை வலுப்படுத்தப்படும். அங்கீகரிக்கப்படாத நுண்நிதி வணிகங்கள் மூடப்படும், மேலும் பொறுப்பானவர்களுக்கு எதிரான தண்டனை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். நுண்கடன் வழங்குநர்களால் பாதிக்கப்பட்ட மற்றும் துன்புறுத்தப்பட்ட பெண்களைப் பாதுகாக்க விசேட தலையீடு மேற்கொள்ளப்படும்.

ஊழியர் சேமலாப நிதி/ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மூலம் சான்றளிக்கப்பட்டபடி 50%க்கும் அதிகமான பெண்களை வேலைக்கு அமர்த்தும் தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளில் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படும்.

- **சுகாதாரம், போசாக்கு, சுதேச மருத்துவம் மற்றும் சமூக நலன்**

தேசிய ஊட்டச்சத்து கொள்கை செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வோம்.

கடந்த 25 ஆண்டுகளில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டில் எந்த

முன்னேற்றமும் ஏற்படவில்லை. இது நமது நாட்டின் வளர்ச்சியை பாதகமாக பாதிக்கிறது. குழந்தைகளின் சிறந்த வளர்ச்சிக்கு ஆதரவளிக்க அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்க நாங்கள் உறுதியளிப்போம்.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு ஒரு கடுமையான சுகாதாரப் பிரச்சினையாக அடையாளம் கண்டு, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான “திரிபோச“ மற்றும் “ஊட்டச்சத்து பைகள்“ விநியோக திட்டம் மீண்டும் தொடங்கப்படும்.

பாடசாலை மாணவர்களின் கற்றல், வளர்ச்சி மற்றும் அவர்களின் கணித திறன்களை மேம்படுத்த தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்ய பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்தை செயல்படுத்துவோம்.

மலிவு விலையில் ஆரோக்கியமான உணவு வழங்குவதை உறுதி செய்ய உணவு உற்பத்தித் துறையுடன் விசேட திட்டத்தை செயல்படுத்துவோம்.

பிரஜைகளிடையே முனைப்புடனான வாழ்க்கை வட்டத்தை ஊக்குவிக்க உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்துவோம்

முதியோர் மற்றும் நாள்பட்ட நோயாளிகளை கவனித்துக் கொள்ளவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பராமரிப்பு வசதிகளை வழங்கும் நிலையங்களை அதிகரிப்பதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுவோம்

வயது 40 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் 03 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசின் பங்களிப்புடன் முழு மருத்துவப் பரிசோதனை செய்யப்படும். நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து, ஆரோக்கிமான குடிமக்களை உருவாக்குவதன் மூலம், அரசாங்கத்தின் சிகிச்சை செலவைக் குறைத்தல் இதன் நோக்கமாகும்.

இலங்கையர்களுக்கு மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் “மூச்சு“ திட்டம் எமது அரசாங்கத்தின் முன்னுரிமை பணியாக இருக்கும். உலகளாவிய தர நியமங்களை பூர்த்தி செய்ய, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது முழு சுகாதார சேவை வலையமைப்பின் முழுமையான கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படும். சமூகத் தேவைகளுக்கு மருத்துவமனைகளை மாற்றியமைக்கவும், மேம்பட்ட சுகாதார அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்தவும் "மூச்சு" திட்டத்திற்கு தொடர்ந்து நிதியளிக்க நன்கொடையாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

டிஜிட்டல் அடையாள அட்டை மூலமும் அனைத்து குடிமக்களுக்கும் சுகாதார சேவைகள் வழங்கப்படும்.

இலவச சுகாதார உரிமை விரிவுபடுத்தப்படுவதுடன் "சுரக்சா

சுகாதார காப்புறுதி"யை விரிவுபடுத்தப்டுவதன் மூலம் பிள்ளைகள் எந்த மருத்துவமனையிலிருந்தும் சிகிச்சை பெறுவதற்கான சாத்தியத்தை உருவாக்குவோம்.

ஆயுர்வேதம், பாரம்பரிய, சித்த மருத்துவம், யுனானி, ஹோமியோபதி போன்ற பாரம்பரிய மருத்துவத்தை ஊக்குவிப்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதுடன் மாற்று மருத்துவ மரபுகளுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் விசேட வேலைத்திட்டம் உருவாக்கப்படும்.

உலகின் சிறந்த ஆம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு, தற்போது மக்களால் பெரிதும் பாராட்டப்படும் 1990 சுவ செரிய ஆம்புலன்ஸ் சேவை, மேம்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும். மேலும், இந்த நோக்கத்திற்காக, செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

- **வலுப்படுத்தல் மற்றும் சுபீட்சத்தைக் கட்டியெழுப்புதல்**

சமூக நீதியைப் பாதுகாக்கவும், சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரைப் பாதுகாக்கவும் உறுதிபூண்டுள்ளோம். தன்னம்பிக்கை மற்றும் சுய வலிமை கொண்ட, அரசாங்கத்தை சார்ந்திராத ஒரு தேசத்தை உருவாக்குவதே எமது தத்துவமாகும்.

சிரேஸ்ட குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நோயாளிகளுக்கு நேரடி நிதி உதவி வழங்கப்படும்.

- சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள 50,000 நபர்களுக்கான நலன்புரி உதவித்தொகையை மாதத்திற்கு ரூ. 10,000/- வரை (ரூ. 7,500/- இல் இருந்து) அதிகரித்தல்.
- 820,000 முதியோர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி உதவித்தொகையை மாதத்திற்கு ரூ. 5,000/- வரை (ரூ. 3,000/- இல் இருந்து) அதிகரித்தல்.

பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க, வேலையற்றவர்கள் மற்றும் குறைந்த வேலைவாய்ப்பு கொண்டவர்களுக்கு பயிற்சியளித்து, திறன் மேம்படுத்தி வேலைவாய்ப்பு அளிக்கப்படும், அதே நேரத்தில் தொழில்முனைவு வாய்ப்புகளும் வழங்கப்படும். இந்த திட்டத்தின் கீழ், தற்போது வேலையில் உள்ள பட்டதாரிகளுக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படும்.

வேலையற்ற பட்டதாரிகளின் துரித மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் தற்போதைய அறிவு மற்றும் திறன்கள் அடையாளம் காணப்பட்டு, சம்பந்தப்பட்ட வெற்றிடங்கள் உள்ள அரசு நிறுவனங்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள்.

அரச தலையீட்டில் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- **மாற்றுத்திறனாளிகள்**

மனித இனத்தின் வளமான பன்முகத்தன்மையின் ஒரு பகுதியாக இயலாமையை அங்கீகரிக்கும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம். இந்த கருத்தியல் கட்டமைப்பிற்குள், இலங்கையின் வளர்ச்சி மற்றும் சமூக கட்டமைப்பிற்குள் மாற்றுத்திறனாளி குடிமக்களின் தன்னாட்சி, உள்ளடக்கம் மற்றும் பங்களிப்பை நாங்கள் உறுதி செய்வோம்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் நன்மைகள் தொடர்ந்து வழங்கப்படும். மேலும், 410,000 பயனாளிகளுக்கு நலன்புரி உதவித்தொகை மாதத்துக்கு 10,000 வரை (ரூ. 7,500 இலிருந்து) அதிகரிக்கப்படும்

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப உள்நாட்டு சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல்.

கல்வி, வேலைவாய்ப்புகள், சுகாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு, வீட்டுவசதி, போக்குவரத்து, விளையாட்டுதுறை, நீதித்துறை, பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் சமூக, மத, கலாச்சார மற்றும் பிற உரிமைகள் தொடர்பான அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் அணுகலை உறுதி செய்வோம்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான தேசிய திட்டத்தை திறமையாகவும் பயனுள்ள வகையிலும் நிர்வகிப்பதற்காக தேசிய தரவுத்தளம் அமைக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு அரச சேவையில் 3% வேலைவாய்ப்புகளை வழங்கும் கொள்கை அமுல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் அனைத்து குடிமக்களின் உரிமைகளுக்கு இணையாக இருப்பதை உறுதி செய்ய கொள்கைகளின் செயலாக்கத்தை கண்காணிக்க மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் ஆணைக்குழுவை அமைப்போம்.

- **ஆதிவாசிகள் சமூகம்**

எந்தவித பாகுபாடும் இன்றி அனைத்து உரிமைகள் மற்றும் சலுகைகள் விடயத்தில் அனைத்து உரிமைகளையும் வழங்கி, ஆதிவாசிகள் சமூகங்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பது ஐக்கிய மக்கள் கூட்டணியின் உறுதியான நம்பிக்கையாகும். காடுகளின் பரப்பளவு குறைந்து வருவதாலும் நீர்ப் பற்றாக்குறையாலும் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு நடைமுறைக்கேற்ற மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவது எதிர்கால அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருக்கும். உள்நாட்டு ஆதிவாசிகள் சமூகம் எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சினையான நுண்நிதி நெருக்கடிக்கு விரைவான தீர்வு வழங்கப்படும்.

மேலும், ஆதிவாசிகள் சமூகங்களின் மத, கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வோம்

- **விளையாட்டுத்துறை**

காலாவதியான 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுத்துறைச் சட்டம் நீக்கப்பட்டு, நவீன தேவைகளுக்கு ஏற்றவாறு ஒரு வருடத்திற்குள் புதிய விளையாட்டுத்துறைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

உள்நாட்டு விளையாட்டு போட்டிகளின் அட்டவணை நிர்ணயிக்கப்பட்டு, உள்நாட்டு விளையாட்டுகளின் தரத்தை உயர்த்த தேவையான உட்கட்டமைப்பு மற்றும் பயிற்சியாளர்களை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சர்வதேசப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தகுதி பெறும் வீரர்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் விசேட நிதியமொன்று நிறுவப்படும்.

"இலங்கை கிரிக்கெட் நிறுவனம்" பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு கிரிக்கெட்டில் ஊழலை ஒழிப்பதற்கும் கிரிக்கெட்டை ஊக்குவிப்பதற்கும் தேவையான சட்டச் சூழல் உருவாக்கப்படும்.

## அரச துறையை மேம்படுத்தல்

- **இருபத்தியோராம் நூற்றாண்டுக்கு ஏற்ற டிஜிட்டல் இலங்கை**

எதிர்கால அரசாங்கத்தின் கீழ், பொதுமக்கள் சேவை வழங்கலை மேம்படுத்துதல், அபிவிருத்தி இலக்குகளை துரிதப்படுத்துதல் மற்றும் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்காக டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு (DPI) உருவாக்கப்படும்.

டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு (DPI) பூர்வாங்க முயற்சியின் கீழ், அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட அடையாளம் காணக்கூடியவாறு இலக்கமொன்று வழங்கப்படும். இதன் மூலம், பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்கள், கடவுச்சீட்டுகள் மற்றும் முக்கியமான ஆவணங்களின் உறுதிப்படுத்திய பிரதிகளைப் பெறுதல் போன்ற தற்போது சிரமமான நிலையில் உள்ள சேவைகளை வெறும் பொத்தானை அழுத்துவதன் ஊடாக பெறும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறன் உறுதி செய்யப்படும்.

அரசாங்கம் மற்றும் பிரஜைகளுக்கு இடையிலும், அரச நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு இடையிலும் தரவு இயக்க வசதியை வழங்கும் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு 2 ஆண்டுகளுக்குள் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்படும். இலங்கையை பணமில்லா பரிவர்த்தனைகளை நோக்கிய நவீன சமூகமாக மாற்றும் வகையில் டிஜிட்டல் நிதிப் பரிவர்த்தனைகளை மேம்படுத்தும் முறை நிறுவப்படும்.

முழு இலங்கை அரச நிறுவன முறைமையையும் உள்ளடக்கும் வகையில் இலங்கை அரச வலையமைப்பு மற்றும் இலங்கை அரச மேகக்கணினி சேவையை விரிவுபடுத்தி, அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்ற வகையில் அதனை தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்துதல்.

3 மாதங்களுக்குள் இலங்கையில் முழுமையான சைபர் பாதுகாப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்படும்

2022 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளை வகுத்தல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குதல்.

புதிய ஆரம்ப வியாபாரங்களை மேம்படுத்துவதற்காக, தனியார் துறையின் பங்களிப்புடன் ஒரு அபிவிருத்தி நிதியை ஏற்படுத்துதல்.

இலங்கையில் தகவல் தொழிநுட்ப வணிகங்களின் வளர்ச்சிக்கும் வினைத்திறனுடன் பிரஜைக்கான சேவைகளை வழங்குவதற்கும்

இடையூறாக உள்ள அதிவேக இணைய வசதிகள் (High-speed Internet facilities)கிடைக்காமையின் சிக்கலைத் தீர்த்தல் இந்த அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாகக் கருதப்படும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் வணிகங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள நியாயமற்ற வரிகளை நீக்கி, நாட்டின் வளர்ச்சிக்கு அந்தத் துறையின் தனித்துவமான பங்களிப்பை அங்கீகரித்து, அந்தத் துறை தொடர்பாக நியாயமான மற்றும் கவர்ச்சிகரமான வரிக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்.

தகவல் தொழில்நுட்ப வர்த்தகங்களுக்காக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் இலத்திரனியல் உபகரணங்களுக்கான வரிகளை குறைத்தல்.

- **திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கம்**

கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்திற்கான அமைச்சரவை அமைச்சு மீண்டும் நிறுவப்படும். இந்த அமைச்சு கொள்கை உருவாக்கம், கொள்கை புதுப்பித்தல் மற்றும் கொள்கை அமுலாக்கத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்குப் பொறுப்பாக இருக்கும்.

இந்த கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளின் அமுலாக்கத்தை உறுதி செய்ய முழு அதிகாரம் பெற்ற புத்திஜீவிகள் தொழில்முறை வல்லுநர்களைக் கொண்ட "கொள்கை அமுலாக்க ஆணைக்குழு" ஒன்றை நிறுவுவோம். இந்த ஆணைக்குழுவின் பங்கு இந்தக் கொள்கைகளுக்கான அமுலாக்க இலக்குகளை நிர்ணயித்தல், முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்தல், பின்னடைவுகளை ஆய்வு செய்தல் மற்றும் தீர்வுகளைப் பரிந்துரைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். தேர்தல் வாக்குறுதிகளின் அமுலாக்க முன்னேற்றத்தைக் காட்டும் வருடாந்த அறிக்கையை ஆணைக்குழு வெளியிடும்.

- **அரசாங்க சேவை**

முழு அரசாங்க சேவையையும் உள்ளடக்கிய விரிவான மனித வள கணக்காய்வை மேற்கொண்டு, மனித வள முகாமைத்துவ திட்டத்தின் அடிப்படையில் முழு அரசாங்க சேவையையும் மறுசீரமைத்தல்.

மிகவும் திறமையான மற்றும் ஆற்றல்மிக்க நபர்களை மூலோபாய ரீதியாக நிலைப்படுத்துவதை உறுதிசெய்து, அரச சேவையின் அனைத்து ஆட்சேர்ப்புகள், நியமனங்கள் மற்றும் நிலைப்படுத்துதல் தேர்ச்சி அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

அரச சேவையின் செயல்திறனை தரப்படுத்துதல் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டு இலக்குகளின் அடிப்படையில் அரச சேவையை தொடர்ந்து மதிப்பீடு செய்தல். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரச சேவையில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நிதியை முதலீடு செய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சர்வதேச தரத்துடன் சிவில் சேவை கல்விப் பீடத்தை நிறுவுவதன் மூலம் சிவில் சேவை பயிற்சி நிறுவனங்களை தர்க்கரீதியாக மேம்படுத்துவோம்.

அரசு ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுப் படி உயர்வு: எமது அரசாங்கம் தகுதியான அனைத்து அரசதுறை ஊழியர்களுக்கும் வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியை தற்போதைய ரூ. 17,800 வரம்பிலிருந்து குறைந்தபட்சம் ரூ. 25,000 வரை உயர்த்துவதுடன் இது தற்போதைய படிகளுடன் சீராக்கப்படும்.

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பள உயர்வு: அரச சேவைக்கான குறைந்தபட்ச அடிப்படை மாதச் சம்பளம் (தற்போதைய தர விகிதங்களின் அடிப்படையில்) 24% உயர்த்தப்படும். இந்த சீராக்கலில் தற்போது அனுபவிக்கும் பல்வேறு சீராக்கல்கள் மற்றும் படிகளுக்கான சில விதிமுறைகளும் நிபந்தனைகளும் அடங்கும். மேற்கண்ட இரண்டு சீராக்கல்களும் சேர்ந்து, வாழ்க்கைச் செலவுப் படி உட்பட அரச சேவையின் குறைந்தபட்ச தேறிய சம்பளம் ரூ. 57,500 ஆக இருக்கும்.

2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளால் புதிய அரச ஊழியர்களின் ஓய்வூதிய உரிமைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, நாங்கள் முன்னைய முடிவை இரத்து செய்து, 2016 முதல் நியமிக்கப்பட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதிய விதிமுறைகளின்படி அவர்களின் ஓய்வூதியத்தை வழங்க முன்மொழிகிறோம். அதன்படி அவர்களின் நியமனங்கள் மாற்றப்படும்.

அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகள், திறன்கள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் அரசாங்க சேவையில் பொருத்தமான மாற்று பதவிகளுக்கு மாற்றப்படுவார்கள். தற்பொழுது அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தொழில் சந்தையில் போட்டியிடும் வகையில் வேலை வாய்ப்புகளை பெறுவதற்குப் பொருத்தமான தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும்.

- **கடவுச்சீட்டு வரிசை முடிவுக்கு கொண்டு வருதல்**

வரிசையின்றி விரைவாக கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை வழங்க, ஒவ்வொரு

நிர்வாக மாவட்டத்திலும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் இணைந்து இயக்கும் 25 சேவை மையங்கள் நிறுவப்படும்.

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் பெற முடியும் என்பதை உறுதி செய்ய அனைத்து பிரதேச செயலக அலுவலகங்களும் இலங்கை அரசாங்க வலையமைப்புடன் (Lanka Government Network) இணைக்கப்படும்.

## வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்தல்.

- **மத மற்றும் கலாச்சார விவகாரங்கள்**

கருணை, அன்பு, சமநிலை மற்றும் பரிவு ஆகியவற்றைப் பரப்பும் நேர்மையான சமூகத்தை உருவாக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். பௌத்த மதத்திற்கு முதன்மை இடம் அளித்து, புத்த சாசனத்தை வளர்த்து பாதுகாக்கும் அதே வேளையில், பிற மதங்களைப் பின்பற்றுபவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் விரும்பும் மதத்தை கடைபிடிக்கவும் வழிபடவும் உள்ள அடிப்படை உரிமையை உறுதி செய்யவும் நாங்கள் செயல்படுவோம்.

அறநெறிப் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் மத கல்வியை வலுப்படுத்த முழு அரச ஆதரவு வழங்கப்படும்.

தங்கள் சொந்த மதத்தைத் தவிர பிற மதங்கள் பற்றிய போதுமான புரிதலை சிறுவர்களுக்கு வழங்க, பாடசாலை பாடத்திட்டத்தில் மதங்களுக்கிடையேயான கல்வியை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

செயற்கை நுண்ணறிவின் (AI) மனிதாபிமான மற்றும் நெறிமுறை மேம்பாட்டிற்காக பௌத்த தத்துவம் மற்றும் பிற மத தத்துவங்களிலிருந்து பெறக்கூடிய எடுத்துக்காட்டுகள் பற்றிய ஆராய்ச்சிக்கு அரசு ஆதரவு வழங்கப்படும்.

கலைப் படைப்புகளுக்கான அனைத்து தணிக்கைகளையும் நாம் நீக்குவோம். அதற்கு பதிலாக, படைப்புகளை வகைப்படுத்தி மதிப்பிடுவதற்கான குறிப்பிட்ட முறையை நிறுவுவோம்.

பாரம்பரிய கலைஞர்களின் தொழில் வாழ்க்கையை உயர்ந்த தரத்திற்கு உயர்த்த தேவையான அரச ஆதரவை வழங்குவோம்.

கலைப் படைப்புகள் தொடர்பான அறிவுசார் சொத்து பிரச்சினைகளைத் தீர்க்க அறிவுசார் சொத்துப் பணியகத்துக்குள் ஒரு விசேட பிரிவை நிறுவுவோம்.

டிஜிட்டல் குழும திரையரங்குகளை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கை பார்வையாளர்களை திரையரங்குகளுக்கு ஈர்க்க முயற்சிப்போம்.

ஓவியங்கள், சிற்பங்கள், புகைப்படங்கள் மற்றும் இசை நாடகங்கள் உள்ளிட்ட கலாச்சார மற்றும் கலை நடவடிக்கைகளுக்கான பயிற்சி மற்றும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச கலை இடங்களை நிறுவுவோம்.

- **ஊடகம்**

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் உள்ள கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான

உட்பிரிவுகளை நீக்கி, இணைய சேவை வழங்குநர்கள் தங்கள் வணிகங்களைத் தடையின்றி நடத்த அனுமதிக்கும் சட்டமூலம் அறிமுகப்படுத்துவது புதிய அரசாங்கத்தின் முக்கிய பணியாகும்.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத் துறைகளில் உள்ள அனைத்து தரப்புகளின் நலன்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கும், ஊடகங்கள் தொடர்பான கொள்கை முடிவுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான பொறுப்புகள் ஒப்படைக்கப்படுவதற்கும் ஒரு சுயாதீனமான தேசிய ஊடக ஆணைக்குழு நிறுவப்படும்.

பிரதேச ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகவியலாளர்களின் தொழில் நிலைத்தன்மையைப் பாதுகாக்க தேவையான சட்டப் பாதுகாப்பை வழங்க புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இயற்றப்படும்.

பிரித்தானியாவின் BBC ஒளிபரப்பு நிறுவனத்தின் நிர்வாக மாதிரியை பின்பற்றி, நேரடி பாராளுமன்ற பதிலுக்கு கட்டுப்பட்ட வகையில் "நம்பிக்கைப் பொறுப்பு" இன் கீழ் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கட்டுப்பாட்டில் இருக்கும்.

- **வீட்டமைப்பு மற்றும் பொது வசதிகள்**

குறைந்த வருமானம் மற்றும் நடுத்தரவர்க்க வீட்டுத் திட்டங்களை நிர்மாணிப்பதற்கு அரசுக்குச் சொந்தமான காணிகள் வழங்கப்படும்.

அரசாங்கத்தால் நெறிப்படுத்தப்பட்டு பூர்த்தியடையாத வீட்டுத்திட்ட நடவடிக்கைகளை துரிதமாகப் பூர்த்தி செய்து அனைவருக்கும் நியாயமான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதற்காக புதிதாக உருவாக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வீட்டுவசதித் திட்டத்தில் கிராமப்புற, நகர்ப்புற, மலைநாட்டு, பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மீனவ சமூகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வீடுகள் மற்றும் வணிக கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் இறக்குமதிக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள அதிக வரியை நீக்கி கட்டுமான செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தங்களது முதல் வீட்டு அலகை வாங்கும் அல்லது வீடு கட்டுவதற்கான முதல் காணியை வாங்கும் குடும்பங்களுக்கு குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் நீண்ட கால கட்டண விருப்பங்களுடன் விசேட வீட்டுக் கடன் திட்டம் (இரண்டு தலைமுறை கடன்) அறிமுகப்படுத்தப்படும்.

மின்சாரம், பெற்றோலியம், எரிவாயு மற்றும் நீர் உள்ளிட்ட அனைத்து பயன்பாடுகளின் ஒழுங்குமுறைகளை உறுதி செய்ய இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) வலுப்படுத்தப்படும்.

- **புலம்பெயர்ந்த ஊழியர்கள் மற்றும் வேலை வாய்ப்பு**

இலங்கைக்கான தனித்துவமான டிஜிட்டல் அடையாள முறை அமுல்படுத்தப்பட்ட பின்னர், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் உள்ளவர்களுக்கான வீடு கட்டும் பொருட்களுக்கு வரி விலக்கு திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தும். வெளிநாட்டு பண அனுப்பீடுகளின் அடிப்படையில் மின்சார வாகனங்களுக்கான வாகன உரிமங்களை வழங்குவதற்கு புதிய முறை அறிமுகப்படுத்தப்படும்..

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான சட்ட மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

வெளிநாடு வாழ் தொழிலாளர்கள் வெளிநாட்டில் இருந்து வாக்களிக்க ஏதுவாக தேர்தல் சட்டம் திருத்தப்படும்.

மத்திய கிழக்கு மற்றும் பிற நாடுகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைக்கு திரும்ப முடியாத கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் இலங்கை தொழிலாளர்களை நாட்டிற்கு திரும்ப அழைத்து வருவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் துறையின் அனைத்து ஊழியர்களுக்கும் பங்களிப்பு காப்புறுதித்திட்டம் மற்றும் விசேட வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வீட்டு வேலைகளை ஒழுங்குபடுத்த சட்டங்களை இயற்றுதல், சேவை நிலையத் துன்புறுத்தலை நிவர்த்தி செய்தல், தொடர்புடைய சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஒப்பந்தங்களை அங்கீகரித்தல் மற்றும் தொழிலாளர்களைப் பாதுகாக்க தொழில் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையை அதிகரித்தல்.

குறுகிய கால வேலைகளைக் கொண்ட சுதந்திர சந்தை அமைப்பின் (Gig economy) சுய தொழில் செய்பவர்கள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்களின் உரிமைகளும் பாதுகாப்பு வலைகளும் வலுப்படுத்தப்படும். புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி, பங்களிப்பு சேமிப்புத் திட்டத்தையும் அறிமுகப்படுத்துவோம்.

- **மலையக மக்கள்**

இரண்டு நூற்றாண்டுகளாக மலையக தமிழ் சமூகம் இலங்கைக்கு வழங்கிய பெரும் பங்களிப்பை நாம் அங்கீகரிக்கிறோம். அவர்கள்

அனுபவித்த கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்பைக் கருத்தில் கொண்டு, இந்தச் சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்த நேர்மறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். இதற்காக பின்வரும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்:

விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடப்பிரிவுகளைக் கொண்ட தேசிய பாடசாலைகளை நிறுவுவது உட்பட இலக்கு நோக்கிய திட்டங்கள் மூலம் அனைத்து நிலைகளிலும் மலையக மாணவர்களின் கல்வி சாதனைகளை மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், கலை மற்றும் கணிதம் (STEAM) ஆகிய பாடங்களில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக தமிழ் மொழி மூலமான மேலதிக கல்வியியல் கல்லூரி மற்றும் தாதியர் பயிற்சி நிறுவனத்தை நிறுவுதல்.

இலங்கை மலைநாட்டுப் பல்கலைக்கழகம் (HUSL) என்ற உத்தேச பெயரில் முழுமையான பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான முதல் படியாக தற்போதுள்ள பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஹட்டன் பகுதியில் வளாகம் ஒன்றை ஆரம்பித்தல்.

மலையக இளைஞர்களுக்கான இலக்கு நோக்கிய மற்றும் அணுகக்கூடிய தொழிற்பயிற்சி திட்டங்களை உருவாக்குதல்.

தோட்டத்துறையின் அனைத்து சுகாதார வசதிகளையும் தேசிய சுகாதார அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்.

குழந்தைகளிடையே குள்ளமான தோற்றம், இனப்பெருக்க வயதுடைய பெண்களிடையே இரத்த சோகை, குழந்தை மற்றும் தாய் இறப்பு விகிதம் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்காக இலக்கு நோக்கிய உதவித் திட்டத்தை செயல்படுத்துதல்.

தோட்டப்புற சமூகங்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டம் நியாயமான மற்றும் நீதியான முறையில் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

தோட்டத் தொழிலாளர்களை காணிக்குச் சொந்தமான சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான அரசாங்கக் கொள்கையை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்

இந்த இடம்பெயர் காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு முறையான சம்பளத்தை உறுதிப்படுத்தல்.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகள், கால்நடை பராமரிப்பு மற்றும் தொழில்முனைவர் நடவடிக்கைகளுக்காகத் தோட்டங்களுக்குள் உள்ள பயன்படுத்தப்படாத காணிகளை தோட்டங்களைச் சார்ந்த

குடியிருப்பாளர்களுக்கு பகிர்ந்தளித்தல். தோட்டப் பகுதிகளில் குடியிருப்பவர்கள் தற்போது பயிர் செய்து கொண்டிருக்கும் காணிகளுக்கு அரசாங்கத்தின் கொள்கை முறைப்படி உறுதிகளை வழங்கல்.

மலையக தோட்டப்புற சமூகங்கள் போதுமான அளவில் உள்ளடக்கப்படாத பகுதிகளில், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் கொள்கைக்கு இணையாக அரச வேலைவாய்ப்புக்கான நேர்மறையான செயல் திட்டத்தை செயல்படுத்துதல். இதன்படி, தோட்டப்புறப் பகுதிகளில் புதிய கிராமங்களை நிறுவுதல் மற்றும் NEVIDA க்கு அதன் விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான வளங்களை வழங்குதல். புதிய கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலக எல்லைகளை வரையறுத்து, தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட உரிமையாளர்களுக்கு கட்டுப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு முழுமையான பிரஜையாக மாறுவதற்கான வாய்ப்பை வழங்கும் பரவலாக்கப்பட்ட அரச சேவைகளுக்கு சமமாக பிரவேசிக்கும் வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

தோட்டங்களைச் சார்ந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான உறுதிகளுடனான காணிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல். குறித்த காணிகள், வீதிகளுக்கு எளிதான செல்லக் கூடிய இடங்களில் உள்ளதாக இருக்கும் என்பதுடன் பகிர்ந்தளிக்கப்படும் காணியின் பரப்பளவு, அந்த பிரதேச செயலாளர் பிரிவில் மற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பரப்புக்கு சமமாக இருக்கும்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்த நம்பிக்கைப் பொறுப்பு (PHDT), தேசிய வீடமைப்பு அதிகாரசபை (NHDA) மற்றும் பிற அரசாங்க திட்டங்களின் கீழ் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு உரித்து உறுதிகளை வழங்குவதன் மூலம் அவற்றை ஒழுங்குபடுத்தல்.

நகர மையங்களுக்கு இடம்பெயரும் தமிழ் மக்களை குறைந்த வருமான வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு வலையமைப்பு திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் இந்த குடும்பங்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு இடமளிக்கும் வகையில் அந்தந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் வளங்களை மேம்படுத்தல்

வினைத்திறனான மற்றும் தர்க்கரீதியான அதிகாரப் பகிர்வை உறுதி செய்வதற்காக, தோட்டப்புறப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கையை மீளாய்வு செய்வோம்.

மலையக மக்களின் பரவலான வாழ்விட முறையைக் கருத்தில் கொண்டு, அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட தேவையான ஆலோசனை மற்றும்

நிறைவேற்று அதிகாரங்களுடன், மலையக தமிழ் சமூகத்தின் கலாச்சார, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் சட்ட மூலங்கள் மற்றும் சட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்ய அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையில் அரசாங்க நிறுவனமாக நிலத் தொடர்பற்ற சமூக சபையை (Non-Territorial Community Councils) உருவாக்குதல்.

- **ஓய்வூதிய நன்மைகளைப் பாதுகாத்தல்**

2016-2019 காலப்பகுதிக்குள் ஓய்வூதியதாரர்களுக்கு இல்லாது போன ஓய்வூதியத்தை மறுசீரமைத்து, ஓய்வூதிய முரண்பாட்டுக்கு நிலையான தீர்வை வழங்குதல்.

2016க்கு முன் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு அக்ரஹா காப்புறுதியை விரிவுபடுத்தல்.

ஓய்வூதியம் பெற்ற சமூகத்திற்கு அதிக நன்மைகளை வழங்கும் வகையில் அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்த 1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தை திருத்துவோம்.

- **ரணவிரு (போர் வீரர்) நலன்**

தேசிய பாதுகாப்பிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த வீரர்களின் கௌரவத்தைப் பாதுகாத்து அவர்களின் நலனை உறுதி செய்ய 6 மாதங்களுக்குள் இராணுவ அலுவல்கள் திணைக்களம் நிறுவப்படும். தற்போது இராணுவ நலனுக்கு பொறுப்பாக உள்ள அனைத்து நிறுவனங்களும் இந்த துறையின் கீழ் ஒருங்கிணைக்கப்படும். இது புனர்வாழ்வு, சுகாதாரம், தொழிற்கல்வி, ஆலோசனை மற்றும் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சேவைகளை வழங்குதல்

ஓய்வு பெற்ற போர் வீரர்களுக்கு ‘One Rank-One Pension’ என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளுதல்.

போர் வீரர்களின் பிரச்சினைகளைக் கேட்டு தீர்க்க சிறப்பு ஒம்புஸ்மன் ஒருவரை நியமித்தல், மற்றும் அந்த ஒம்புஸ்மன் அதிகாரியிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளை 6 மாதங்களுக்குள் செயல்படுத்துதல்.

- **வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்குதல்**

நீண்டகால நிலைத்தன்மைக்காக, இலங்கையின் ஓய்வூதிய முறையை முற்றிலும் மறுசீரமைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். இது அரச ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் மற்றும் புலம்பெயர்

தொழிலாளர்கள் உட்பட அனைத்து குடிமக்களும் அணுகக்கூடிய உலகளாவிய, (Universal) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்குவதை உள்ளடக்கியது. அரச ஊழியர்கள் பங்களிப்பு செய்யாமல் ஓய்வூதியம் பெறும் தற்போதைய மாதிரி நிதி ரீதியாக நிலையானது அல்ல.

அனைத்து தரப்புகளுடனும் கலந்துரையாடிய பிறகு தனியார் துறை ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூ. 17,500 எல்லையிலிருந்து குறைந்தபட்ச ஊதியத்தை மாதம் ரூ. 25,000 வரையாவது திருத்தியமைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம்.

"ஜன சவிய", "சமுர்தி", "அஸ்வெசும", "கெமிதிரிய" ஆகிய சமூக பாதுகாப்பு திட்டங்களின் சிறந்த நடைமுறைகளை பயன்படுத்தி, விரிவான புதிய திட்டத்தை உருவாக்கி, வறுமையை வரலாற்றின் ஒரு பகுதியாக மாற்றுவோம். புதிய திட்டத்தின் மூலம் மாதாந்த பயனாளி குடும்பங்களுக்கு 24 மாதங்கள் வரை ரூ.20,000 உதவித்தொகை வழங்கப்படும். புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும் வரை, அஸ்வெசும பலன்கள் தொடர்ந்து வழங்கப்படும். இந்த புதிய திட்டம் நேரடி பண வழங்கலுக்கு மட்டுப்படுத்தப்படாமல், பயனாளி குடும்பங்களின் நுகர்வு, சேமிப்பு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்தி, அறிவு, தேர்ச்சி மற்றும் மனப்பான்மைகளை மேம்படுத்தும் திட்டமாக இருக்கும்.

- அபாயத்திற்கு உள்ளான மற்றும் இடம்பெயர் குடும்பங்களுக்கு மாதம் ரூ. 10,000 (ரூ. 5,000 இலிருந்து) வரை
- ஏழைக் குடும்பங்களுக்கு மாதம் ரூ. 10,000 (ரூ. 8,500 இலிருந்து) வரை
- மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு மாதம் ரூ. 15,000 விகிதம்

இந்த புதிய திட்டம் நேரடி பண உதவிக்கு மட்டும் வரையறுக்கப்பட மாட்டாது என்பதுடன் பயனாளி குடும்பங்களின் நுகர்வு, சேமிப்பு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய அனைத்து அம்சங்களிலும் கவனம் செலுத்தும் அறிவு, தேர்ச்சி மற்றும் மனப்பான்மைகளை மேம்படுத்தும் ஒரு திட்டமாகும்.

இலங்கையின் வறுமை ஒழிப்பில் சமுர்த்தி திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கிய பங்களிப்பை அடையாளம் கண்டு, புதிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படும் வரை, தற்போதைய நிகழ்ச்சித்திட்டத்தில் பயனாளிகளை தவறாக இலக்கு வைப்பதை நிவர்த்தி செய்ய அறிவியல் ரீதியான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். இது தற்போதைய நிகழ்ச்சித்திட்டத்தில்

அநியாயமாக விலக்கப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கும், பொருளாதார நெருக்கடியால் வறுமைக்கு தள்ளப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது உறுதி செய்யப்படும். சமுர்த்தி வங்கிகளின் மூலதனம் வலுப்படுத்தப்படும். இதில் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல், ஊழியர்களுக்கு நிலையான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், கட்டாய சேமிப்புத் திட்டம் மற்றும் வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு போன்ற பயனுள்ள திட்டங்கள் தொடர்ந்தும் பேணப்படும். மேலும், சமுர்த்தி ஊழியர்களின் நீண்டகால முகாமைத்துவம் மற்றும் ஓய்வூதிய பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

எமது பொருளாதாரத்தில் எப்போதும் செயலில் உள்ள சமூகங்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, QR குறியீடு அடிப்படையிலான திட்டத்தின் மூலம் விசேட எரிபொருள் மானியம் வழங்கப்படும். இந்த உதவி விவசாயிகள், "சக்தி" அரிசி ஆலை உரிமையாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், மீனவர்கள், மற்றும் பாடசாலை போக்குவரத்துப் பிரிவு சாரதிகளுக்கு வழங்கப்படும்.

## தேசியப் பாதுகாப்பு

- **ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல்**

எந்த வகையிலும் இனவாதம், தீவிரவாதம் அல்லது பிரிவினைவாதம் ஊக்குவிக்கப்படாது. ஒவ்வொரு குடிமகனும் இனம், மதம், சாதி, வர்க்கம் அல்லது பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் சட்டத்தின் கீழ் சமமாக நடத்தப்படுவார்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் தேவையான முறையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவோம்.

பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் போது அனைத்து நிறுவனங்களிலும் பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு சட்டத்தை உருவாக்குவோம்.

மதத் தலைவர்கள், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துக்களைப் பெற்று, தற்போதைய அரசியலமைப்பை மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சக்தி / ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த செயல்முறையில், எமது கொள்கை என்னவென்றால், தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை செயலில் ஈடுபடுத்த, கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதுடன். மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

தேசிய அரசாங்கம் நிறுவப்படும் பட்சத்தில் அமைச்சர்/ பிரதியமைச்சர் /இராஜாங்க அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு ஆற்றலை

வழங்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் இரத்துச் செய்யப்படும்.

தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டாலும் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பிலான வரையறை ஏற்புடையதாக இருக்கும்.

6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும், மேலும் அதிகபட்ச நிதி திறன் மற்றும் செயல்திறனுடன் மாகாண சபைகள் செயல்படுவதை உறுதிசெய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு, அவற்றின் நோக்கங்களை திறம்பட செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம். பாதுகாப்புத் தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். அரசு ஆதரவுடன் மக்கள் தொகை மாற்றங்கள் செய்யப்படாத கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். மேலும், மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக முதலீடு செய்ய விசேட சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படும். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், சமூக மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, யுத்தத்தல் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை உறுதிசெய்வதற்கு ஒரு சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டை ஏற்பாடு செய்வோம்.

சட்டவிரோதமாக தள்ளிப்போடப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களை விரைவாக நடத்த தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல்.

நீதித்துறை நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீட்டைத் தடுக்க சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன், நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் செயல்திறனை நிறுவ தேவையான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தி, அது சமூக மற்றும் பொருளாதார உரிமைகள், கலாச்சார உரிமைகள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள், சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி உரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். குடிமக்கள் எளிதாக நீதியைப் பெறும் வகையில், மேல்முறையீட்டு நீதிமன்ற

விசாரணைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படும். இதற்கு அடிப்படை உரிமைகள் மற்றும் மொழி உரிமைகள் தொடர்பான அடிப்படை நீதிமன்ற அதிகாரம் வழங்கப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லது உயர் நீதிமன்றத்தின் விசேட அனுமதியுடன் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய முடியும்.

எந்தவிதத்திலுமான ஊழல் நடவடிக்கையானது அரசியலமைப்பை மீறுவதற்குச் சமமாகக் கருதப்படும், அதேபோல் ஊழல் எதிர்ப்பு அரசியலமைப்பில் சேர்க்கப்படுவது அரசியலமைப்பு திருத்த செயல்முறையின் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

அரசு சேவையை முழுமையாக அரசியல் மயமற்றதாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரநிலைகள் மற்றும் நடைமுறைகளை அரசு சேவை ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தரங்களையும் கோட்பாடுகளையும் நிலைநாட்டுவதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் 15.04.2018 முதல் சட்டமாக மாறியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கமுறைக் கோவையை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பாராளுமன்றம். அதற்கு சமாந்தரமாக மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

அமைச்சர்களுக்கு, நியமனங்கள் வழங்கும்போது, தங்கள் அமைச்சுகளின் அதிகார வரம்பிற்குட்பட்ட அரசு மற்றும் அரை அரசு நிறுவனங்களில் தங்கள் குடும்ப உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தற்போது நீதிமன்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊழல்வாதிகள் எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலுக்கும் வேட்புமனு வழங்கப்பட மாட்டாது. மற்றும் அரசாங்கப் பதவி எதுவும் வழங்கப்பட மாட்டாது.

சலுகைகள் மற்றும் அனுசரணைகளின் காரணமாக உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்க சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கைகளை 2 மாதங்களுக்குள் முடிக்க கட்டாயப்படுத்தும் ஏற்பாடுகளை முன்வைத்தல்

- **வெளிநாட்டு உறவுகள் மற்றும் வர்த்தகக் கூட்டணிகள்**

எமது அரசாங்கம் பலதரப்பு வெளிநாட்டுக் கொள்கையுடன் கூடிய

சுயாதீனமான ஒரு அரசாங்கமாக இருக்கும். எமது தூரநோக்கு அனைவருடனும் நட்பைப் பேணுதல், எவருடனும் பகைமை கொள்ளாதிருத்தலாகும்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சட்டத்தின் ஆட்சி மற்றும் சர்வதேச விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும் உலக ஒழுங்கை ஊக்குவிக்கும் பல்தரப்பு கொள்கையாகும். இதில் உள்ள முக்கிய கோட்பாடுகளின் பலத்தைப் பயன்படுத்தாமை, அமைதியான முறையில் மோதல்களைத் தீர்த்தல் மற்றும் மனித உரிமைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

இராணுவக் கூட்டணிகள் இல்லாமல் உடனடி மற்றும் பிராந்திய அண்மைய நாடுகளுடன் அமைதியான சகவாழ்வு, பிராந்திய ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதில் முன்னணி வகிப்பது ஆகியவை அடிக்கல்லாக இருக்கும்.

இலங்கை அனைத்து நாடுகளுடனும் நெருக்கமாக ஈடுபடும், மேலும் பொருளாதார இராஜதந்திரம் கொள்கை உருவாக்கத்தின் மையமாக இருக்கும். எமது பொருளாதார இராஜதந்திர உத்தி உலகளாவிய உற்பத்தி வலையமைப்புகளில் ஒருங்கிணைப்பதற்கும் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கும் முதலீடு மற்றும் வர்த்தக தூண்களின் மீது கட்டமைக்கப்படும். உலக சந்தையில் இலங்கையின் நிலையை உயர்த்தும் வகையில், அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதியைப் போன்றதான சமமான வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான விசேட அரச அலகை நிறுவுவதை மையமாகக் கொண்டு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கையொன்றை வகுக்கவுள்ளோம்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் மக்களின் சிறந்த நலனை உறுதி செய்வதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கை ஊக்குவித்தல்.

இலங்கை பிராந்திய வர்த்தகக் கூட்டணிகளுக்கு உறுதியளிக்கும்.

நாங்கள் 75% தொழில்முறை இராஜதந்திரிகள் மற்றும் அதிகபட்சம் 25% தொழில்முறை அல்லாத நியமனங்களின் மாதிரி கலவையை உறுதி செய்வோம். ஆட்சேர்ப்பு செயல்முறை புதுப்பிக்கப்படும், மேலும் அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களை நியமிப்பது தடை செய்யப்படும்.

- **தேசிய பாதுகாப்பு**

தொலைநோக்கு மற்றும் வலுவான வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு மூலம் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

தேசிய பாதுகாப்பு சபையை நிறுவி அதற்கு தேவையான அதிகாரங்களை வழங்கும் புதிய சட்டம்.

நாட்டின் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் ஒருங்கிணைப்புடன் தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் செயல்படும் அலகுகளாகக் கருதப்படும். இந்த கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைந்த புலனாய்வு கட்டமைப்பை நிறுவுவதன் மூலம் அரசு புலனாய்வுப் பிரிவுக்கு கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு அங்கீகாரம் வழங்கப்படும். இந்த ஒருங்கிணைப்பு அணுகுமுறை தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்தும், செயல்பாடுகளை திறமையாக்கும், ஒவ்வொரு பிரிவின் சுயாதீனத்தை பராமரிக்கும் அதே வேளையில் ஒட்டுமொத்த தேசிய பாதுகாப்பு திறன்களை மேம்படுத்தும். இந்த கட்டமைப்பு சுயாதீன நிறுவனங்களுக்கிடையே திறமையான ஒத்துழைப்பை உறுதி செய்து, வலுவான மற்றும் பதிலளிக்கக்கூடிய தேசிய பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்கும்.

இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படை ஆகியவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள், நவீன ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் போதுமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல். முப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் தொழில் பாதுகாக்கப்படும். அவர்களுக்கு கூடுதலான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.

நிறுவன சீர்திருத்தத்தின் மூலம் இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு ஏற்றவாறு ஆயுதப் படைகளை நவீனமயமாக்கல்.

அனைத்து இன மற்றும் மத குழுக்களுக்கும் அவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்கும் வகையில் செயல்படுதல் அனைத்து இனமும் சமூகத்தில் இருந்து வெளிப்படும் பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையிலான பாதுகாப்பை உறுதி செய்தல்,

- **சட்டம் மற்றும் ஒழுங்கு**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 2 (1) (இ) இன் படி முறையான அதிகாரம் பெற்ற விசாரணை ஆணைக்குழு 3 மாதங்களுக்குள் நிறுவப்படும். ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமான குற்றவாளிகளுக்கு மூவரடங்கிய நிரந்தர மேல் நீதிமன்றத்தால் (Trial at bar) நாளாந்தம் வழக்கை விசாரணை செய்து தண்டனை வழங்குவது

அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகக் கருதப்படுகிறது.

முன்னைய அரசின் இறப்புக்குப் பின்னரான தகனம் செய்த கொள்கை குறித்து விசாரணை நடத்தப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கைகளின் மூலம் அவர்களை பொறுப்புக்கூற வைத்தல்.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்து செய்து, நாட்டின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சிறந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நிறுவுதல்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICPPR) அதிகாரிகளால் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க தேவையான சட்ட திருத்தங்களைச் செய்தல். வெறுப்புப் பேச்சுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சட்டப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

நீதியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் சட்ட தாமதங்களைக் குறைப்பதற்கும் 5 ஆண்டுகளுக்குள் நீதித்துறை முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்படும்.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மேலும் பலப்படுத்தப்படும் மற்றும் அனைத்து வகையான வழக்குகளுக்கும் குடிமக்களுக்கு சட்ட உதவி வழங்குவது உறுதி செய்யப்படும்.

பிரதேச செயலகங்களில் ஒவ்வொரு மத்தியஸ்த சபைக்கும் தனியான நிரந்தர அலுவலகம் நிறுவப்பட்டு போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு நிரந்தர ஊழியர்கள் நியமிக்கப்படுவர்.

அரசியல் காரணங்களுக்காக மீளப் பெறப்பட்ட குற்றவியல் வழக்குகள் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 03 மாதங்களுக்குள் மீளவும் அந்த வழக்குகள் தொடுக்கப்படும். நீதிமன்றத்தால் பொறுப்புக்கூற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அநியாயமாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான உதவிகளை வழங்குவோம்.

150 வருடங்களுக்கும் மேலான பழைமை வாய்ந்த பொலிஸ் கட்டளைச் சட்டத்தை புதுப்பித்து, பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்களை விரைவாகவும் நியாயமான முறையிலும் மேற்கொள்ளுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான போதுமான வசதிகள் வழங்கப்பட்டு, பொலிஸ் சேவையை சர்வதேச தர வரிசைக்கு கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு முழுவதும் 119 அவசர அழைப்புகளுக்கு 30 நிமிடங்களுக்குள் பொலிஸ் திணைக்களம் பதிலளிப்பதை உறுதி செய்வதற்கு தேவையான வளங்கள் வழங்கப்படும் என்பதுடன், நீதித்துறையை டிஜிட்டல் மயமாக்கல். பொலிஸ் திணைக்களம் தற்போதையையும் விட பொதுமக்களுக்கு ஏற்ற, வேகமான சேவையை வழங்க சாத்தியவளங்கள் கிடைக்கக்கூடியவாறு டிஜிட்டல்மயமாக்கப்படும்.

- **ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை விரைவாக செயல்படுத்த தேவையான வசதிகளும் பயிற்சியும் வழங்கப்படும்.

வழக்குத் தொடுப்பதன் சுதந்திரம் மற்றும் திறனை உறுதி செய்ய சுயாதீன பொது வழக்குத் தொடுநர் அலுவலகம் நிறுவப்படும்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருடப்பட்ட சொத்துக்களை மீட்டெடுக்கும் சட்டமூலம் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்படும். ஊழல் செயல்களால் பெறப்பட்ட சொத்துக்களை மீட்டெடுப்பது விரைவாக மேற்கொள்ளப்படும்.

தற்போது நிறுவப்பட்டுள்ள நிரந்தர மூவரடங்கிய ஊழல் எதிர்ப்பு மேல் நீதிமன்றங்களை மீண்டும் பலப்படுத்தி இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான வழக்குகளை நாள்தோறும் (Day-to-day trials) தாமதமின்றி நடத்த தேவையான சூழ்நிலை உருவாக்கப்படும்.

- **போதைப்பொருட்கள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தல்.**

இலங்கைக்குள் போதைப்பொருள் இறக்குமதியைத் தடுக்கவும், இலங்கை வழியாக செல்லும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் பாதைகளைச் சீர்குலைக்கவும் இன்டர்போல் மற்றும் பிற வெளிநாட்டு புலனாய்வு சேவைகளுடன் நெருக்கமாக செயல்படுவோம்.

பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரித்து 6 மாதங்களுக்குள் தண்டனை வழங்க போதைப்பொருள் எதிர்ப்பு விசேட மேல்நீதிமன்றம் (Anti-narcotic special high court) நிறுவப்படும்.

போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களை விரைவாக புனர்வாழ்வளித்து சமூகத்தில் மீண்டும் இணைக்க நாடு முழுவதும் நவீன வசதிகளுடன் 25 புனர்வாழ்வு நிலையங்கள் நிறுவப்படும்.

2 ஆண்டுகளுக்குள் நச்சு போதைப்பொருள் கடத்தலை முற்றிலுமாக ஒழிக்க பாடுபடுவோம்.

மது அருந்துதல் மற்றும் புகைபிடித்தலை ஊக்கமிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் அண்மையில் ஊழல் முறையில் வழங்கப்பட்ட "மதுபான உரிமங்களை" இரத்து செய்ய நடவடிக்கை எடுப்போம்.

- **நிலைபெறுதகு சுற்றாடல்**

அனைத்து துறைகளிலும் ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான எங்கள் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறோம், மேலும் வளர்ச்சி செயல்முறையில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம். (திருத்தப்பட்ட) 1980 தேசிய சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் பிற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் புதுப்பிக்கப்படும்.

சூரிய சக்தி, காற்றாலை மின்சாரம், Pump Storage, அலை மின்சாரம், பசுமை ஐதரசன், Bio-mass உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களை ஊக்குவிப்பதன் மூலமும், பரிமாற்ற முறைமையில் சுற்றாடலுக்கு உகந்த மாற்று வலுசக்தி ஆதாரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், புவி வெப்பமடைதல் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கையில் உள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக செயல்பட முன்னுரிமை அளிக்கப்படும்.

அடிக்கடி மக்களுடன் மோதும் யானைகள், குரங்குகள், மயில்கள் மற்றும் பிற விலங்குகளின் மீது கவனம் செலுத்தி, மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான மோதல்களைத் தணிக்க அறிவியல் அடிப்படையிலான, சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான தீர்வுகளை செயல்படுத்த எமது அரசாங்கம் உறுதிபூணும்

---

சஜித் பிரேமதாச ஆகிய எனது தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அதன் கீழ் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள எதிர்காலத் திட்டங்கள் பற்றிய சுருக்கமான சாராம்சம் உங்கள் தகவலுக்காக இவ்வாறு அச்சிடப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை கருத்தாக்கக் கட்டமைப்புடன் உடன்பட்டு, ஒவ்வொரு துறை தொடர்பாகவும் செயற்படும் நிபுணர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் விரிவாகக் கலந்துரையாடியதன் பின்னர் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகள், கொள்கைகளாகவும், சாசனங்களாகவும் இந்த கொள்கைப் பிரகடனத்துக்கு ஒருங்கிணைவாக வெளியிடப்படும்.

# சகலருக்கும் வெற்றி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**

X

Download Your Digital Copy